Aug 5 1933


JL
m24,N27SM
N33.7.1
186930

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § ஸ்ரீமுக-ஆவணி : 1933-ஆகஸ்டு § திங்கள் க.

உள்ளுறை. பக்கம்.

'சிவநேசன்' ஆறும் ஆண்டுத் தொகுதி

| | | |
|---|---|---|
| க. | பொருடனைப் போற்றிவாழ் | .... 1 |
| உ. | நூல் வெளியீடு, மதிப்புரை | ... 3 |
| ங. | திருக்கோயிலதிகாரிகள் | ... 4 |
| ச. | திருக்கடைக்காப்பு | ... 6 |
| ரு. | தமிழ்க்கல்வி | ... 7 |
| சு. | வாழ்நாள் வழியடைத்தல் | ... 8 |
| எ. | பத்தினிக்கடவுள் | ... 9 |
| அ. | சிவத்தின் இயல்பு | ... 13 |
| கூ. | 'சிவநேசன்' வாழ்த்தும் மதிப்புரையும் | ... 14 |
| ௰. | திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா | ... (17–2[illegible]) |
| கக. | இருபா இருபஃது | ... (1–3) |

ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பலவான்குடி மணிவாசக சங்கத்தின்

# இருபத்து மூன்றாவது ஆண்டுத் திருவிழா அழைப்பு.

திருச்சிற்றம்பலம்.

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.

திருச்சிற்றம்பலம்.

சிவநேசச் செல்வராகிய ஐயா!

திருவருளால் மணிவாசக சங்கத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டு நிறைவுத் திருவிழா, ஸ்ரீமுக ஆவணி ௧௭, ௧௮ (1, 2—9—1933) வெள்ளி, சனிக் கிழமைகளில், பரம்பரைத் திருப்பணிச் செல்வர் வழித்தோன்றலும், மகாவித்வ சிரோமணியும் ஆகிய அமராவதிபுதூர் சிவநேசத் திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்கள் தலைமை வகிக்க நடைபெறும்.

வெள்ளிக்கிழமை உத்தராடநாள் காலை குமாரவிநாயகர் கோயில் வழிபாடு; திருவுலாக்காட்சி. மாலை—தலைவரவர்களை வரவேற்றல், கடவுள் வாழ்த்து, வந்தனம், அறிக்கைபடித்தல், முகவுரை, ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளை எழுந்தருளச் செய்துகொண்டு பிரதோஷ புண்ணிய காலத்தில் சிவாலய சேவை செய்து வருதல். சனிக்கிழமை முற்பகல் பிற்பகல்களில் சிவமே பொருளெனத் தெளிந்த திருவாளர்களான.— தேவகோட்டை கரு. கி. சொர்ணநாதன் செட்டியார், புரிசை பெருஞ்சொற் கொண்டல் சு. முருகேச முதலியார், தேவகோட்டை வழக்கறிஞர் நாகரத்ன சாஸ்திரியார், மகிபாலப்பதி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலானவர்களின் விரிவுரைகள், தலைவரவர்களின் முடிப்புரை, வந்தனவழிபாடு ஆகிய நிகழ்ச்சிகட்கும், இருதினங்களிலும் நடைபெறும் தேவார திருவாசகக் காட்சிகட்கும் அன்பர்களுடன் வந்துகுழுமி இன்புற வேண்டுகிறோம்.

ஸ்ரீமுக
ஆவணி—௧௨
பலவான்குடி

தங்களன்புள்ள
மணிவாசக சங்கத்தினர்.

உ

சிவமயம்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

16 FEB 1934
MADRAS

பலவான்குடி

# "சிவநேசன்"

## ஆறும் ஆண்டுத் தொகுதி.

ஆங்கிரச ஆவணி முதல்

சீமுக ஆடி வரை.

பலவான்குடி

"சிவநேசன்" அச்சியந்திரசாலையிற்

பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால்

அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

1933

சென்னைப் பதிவு எண், 2302.

உ

சிவமயம்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

# "சிவநேசன்"

# ஆறுவதாண்டின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதிய திருவாளர்கள். | பக்கம் |
|---|---|---|
| அறிவியல், அழகியல், அன்பியல் | ... ம. பாலசுப்பிரமணிய முதலியார், [B. A., B. L. | 137. |
| அன்பினில் இன்பு | ... சி. கணேசையர் | 457 |
| ஹரிஜனங்களும் ஆலயங்களும் | ... டி. எஸ். | 126 |
| ஆகமமும் அனுபவமும் | ... ஓர் அன்பர் | 75 |
| ஆசார்ய மகிமை | ... நல். கண்ணப்ப முதலியார் | 286 |
| ஆடுகோழிகளைத் தாயலறப் பிள்ளையலறப் பலியிடாதீர்கள் | தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார் | 319 |
| ஆதிபகவன் | ... மெ. குப்புசாமி | 392 |
| ஆப்த வாக்கியங்கள் | ... ஆறுமுக நாவலர் | 160 |
| ஆலயப் பிரவேசம் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 153 |
| ஆலயப்பிரவேசம் அவசியமா? | ... சிவசூரியன் | 226 |
| ஆன்றோர் அமுதமொழிகள் | ... பத்திராசிரியர் | 375 |
| ஆஸ்திகர்களே! | மதராஸ் ப்ராந்தீய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார் | 272 |
| இதிலென்ன தப்பு? | ... மெ. குப்புசாமி | 340 |
| இராஜப் பிரதிநிதி யவர்களுக்கு விண்ணப்பம் | யாழ்ப்பாணத்து இந்து சைவ சமயத்தினர் | 206 |
| இராஜராஜேஸ்வரியம்மன் பதிகம் | ... மு. நமசிவாயம் பிள்ளை | 196 |
| இலவம்பஞ்சிற் றுயில் | ... க. ஐயாறுப்பிள்ளை | 353 |
| உண்மை முத்தி | ... நல். கண்ணப்ப முதலியார் | 443 |
| உயிர்களுக்குத் துணைசிவபெருமானே | ... "சமயஞானம்" | 40 |
| உருத்திரன் | ... ச. குமாரசுவாமிக் குருக்கள் | 386 |
| என்னே! துயிலின் பரிசு | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 277 |
| ஹைகோர்ட்ஜட்ஜ் ஸர் டி. முத்துசாமி ஐயர் | பத்திரிகைக் கொய்வு | 396, 440 |
| ஒற்றுமைக்கு உற்றவழி எது? | ... பத்திராசிரியர் | 81 |
| ஓர் உபந்நியாசம் | ... "யதார்த்தவசனி" | 102 |


186930

| | | |
|---|---|---|
| ஓர் விண்ணப்பம் | ... நல். கண்ணப்ப முதலியார் | 267 |
| ஓர் வேண்டுகோள் | ... ,, | 280 |
| கடவுட் காட்சி | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 390 |
| கரிகாற்சோழன் | ... உ. வே. சாமிநாதையர் | 152 |
| கலிகால வரலாறு | ... ஒரு ஸவர்ணி | 185 |
| கலியின் வலிமைகண் டஞ்சார் | ... பத்திராசிரியர் | 339 |
| கல்வியும் கைத்தொழிலும் | ... ,, | 161 |
| கற்பும் கல்வியும் | ... ஆ. சுப்ரமண்யம் | 269 |
| காந்தியாரின் கைதவம் | ... பத்திராசிரியர் | 361 |
| காந்தியின் பத்துக்கேள்விக்கும் பதில் | ... "ஆரியதர்மம்" | 273 |
| காந்தியும் சமயமும் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 213 |
| காலவியல்பு | ... வி. பொன்னம்பலம் | 88 |
| குமாரவிநாயகர் பஞ்சரத்னம் | ... வித்துவான் மு. முத்துப்பிள்ளை | 119 |
| குருவாயூர் தர்மகர்த்தர் ஜாமொரின் அவர்கட்கு விக்ஞாபனம் | யாழ்ப்பாணத்துச் சைவர்கள் | 205 |
| கொண்டாட்டமா? கொலையாட்டமா? | தென்னிந்திய ஜீவரக்ஷாபிரசாரக சபையார் | 114 |
| கோயில் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 115 |
| கோயில் நுழைவு | ... இலக்குமண சுவாமிகள் | 246 |
| சங்கரலிங்க உலா | ... பத்திராசிரியர் | 163 |
| சட்டம் | ... சைவன் | 184 |
| ,, | ... பத்திராசிரியர் | 241 |
| சபைத்தலைவர் உரை | ... ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் | 37 |
| சமய வாழ்க்கையும் தமிழர் நாகரீகமும் | T.K. சிதம்பரநாதமுதலியார் BA.BL<br>கா. சுப்பிரமணியபிள்ளை MA.ML | 438 |
| சம்பந்தர் சண்முகரே | ... மு. சுந்தரவடிவேலன் | 17 |
| சம்பந்தர் முருகன் கலையே | ... தி. மு. செந்திலுயகம் பிள்ளை | 66 |
| சாட்டையடி தலையில் பெற்று வந்த எம். எல். சாமியார் | பத்திராசிரியர் | 398 |
| சாதிபேதம் | ... சைவன் | 26 |
| சிலப்பதிகாரம் | ... சு.மு. இராமசுப்பிரமணியன் | 376,401 |
| சிவநேசர் திருக்கூட்டம் | ... பத்திராசிரியர் | 39, 74 |
| சிவநேசன் சீர் | ... ,, | 1 |
| சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் | | 3,79,119,167,240,324,364,460 |
| சிவபெருமான் சர்வ வியாபகர் | ... ச. குமாரசுவாமிக் குருக்கள் | 292 |
| சிவபெருமானே உண்மைமுத்தியைக் கொடுப்பவர் | ,, | 182 |





| | | |
|---|---|---|
| சிவபெருமானே தியானிக்கற்பாலர் | ... ச. குமாரசுவாமிக் குருக்கள் | 415,445 |
| சிவபெருமானே வழிபாட்டுக்குத் தக்க பலனைக் கொடுப்பவர் | ,, | 224 |
| சிவபெருமானை எக்காலமும் தியானித்தல் வேண்டும். | அர்த்தநாரீஸ்வரன் | 36 |
| சிவம்" என்பதின் கருத்து | ... ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள். | 449 |
| சிவனடியார் திறன் | ... பத்திராசிரியர் | 41 |
| சிவநாந்தர் திருவாக்கு | ... பத்திராசிரியர். | 357 |
| சிவாலயங்களும் சைவசமயமும் | ... சைவன் | 85 |
| சீரிய சிவநேசர்களே! | ... பத்திராசிரியர் | 84 |
| ஜீவபாலனும் செட்டியாரும் | தென்னிந்திய ஜீவரக்ஷாபிரசாரக சபையார். | 350 |
| சுயமரியாதை இயக்கம் | ... அழகிரிநாயுடு | 57 |
| செட்டிநாட்டுப் பத்திராதிபரின் கெட்டிக்காரத்தனம் | தெய்வசிகாமணி | 164 |
| "செட்டி நாடு" | ... தெய்வசிகாமணி | 125 |
| செந்தமிழ்ச்சிறப்பு | கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். | 62 |
| செய்கோன் | ... பத்திரிகைக்கொய்வு | 425 |
| செய்ந்நன்றி யறிதல் | ... பத்திராசிரியர் | 421 |
| சைவசமயத்தின்சிறப்பியல்பு | ஈ. த. இராஜேசுவரியம்மாள் எம். ஏ. எல். டி. | 325, 369 |
| ஞானவாசிட்டம் | ... பத்திராசிரியர் | 363 |
| தந்தைதாய் பேண் | ... க. ஐயாறுப் பிள்ளை | 193 |
| தமிழ்மொழி | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 4 |
| தாழ்ந்த வகுப்பார்களே! | ... "லோகோபகாரி" | 192 |
| திருக்குறள்-கடவுள்வாழ்த்து | ... பா. ரா. பரமசிவமுதலியார் | 346 |
| திருக்கோயிலும் திருத்தொண்டரும் | தி. மு. செந்திலுயகம் பிள்ளை | 169 |
| திருக்கோயிலும் தீண்டாதாரும் | ... பத்திராசிரியர் | 121 |
| திருஞானசம்பந்தரும் உரோமச முனிவரும் | நல். கண்ணப்ப முதலியார் | 289 |
| திருநீறணிவதேன்? | ... வை.ச. இராமலிங்கமுதலியார் | 229 |
| திருநெல்வேலிஜில்லா ஸநாதனதர்ம மகாநாடு | "ஆரியதர்மம்" | 365, 408, 433 |
| திருப்பெருந்துறை மேவிய சிவனே! | "சமயஞானம்" | 450 |

| | | |
|---|---|---|
| திருவண்ணாமலை ஞானதீபக் குடை மகோற்சவம் | நல். கண்ணப்பமுதலியார் | 222 |
| திருவாதிரைத் திருநாட்சிறப்பு... | திருநாவுக்கரசர் தேவாரம் | 201 |
| திரைகடலோடியுந்திரவியந்தேடு... | பத்திராசிரியர் | 321 |
| தீண்டாதாரின் உண்மைநிலை | ... சோணாசலன் | 33 |
| தீண்டாதாரும் கோயிற்பிரவேசமும் | பத்திரிகைக் கொய்வு | 117 |
| தீண்டாதாரும் செட்டிப்பிள்ளைகளும்... | " | 158 |
| தேவாராதி திருப்பாசுரங்களும் ஓதத் தகுவோரும் | தி. சிவலோகநாத தேசிகர் | 116 |
| நன்கொடை | ... பத்திராசிரியர் | 424 |
| நாட்டுக்கோட்டையார்களும் சங்கங்களும் | " | 393 |
| நாஸ்திகர் யார்? | ... க. ராஜமாணிக்கப்பிள்ளை | 389 |
| நிலக்கிழார்கட்கு அறிக்கை | ... பத்திரிகைக்கொய்வு | 448 |
| நீதிமொழிகள் | ... வி. பொன்னம்பலம் | 136 |
| பண்டைத் தமிழ்நாடு | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 234, 261 |
| பரமாத்மா யார்? | ... தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 329 |
| பருவத்தே பயிர்செய் | ... தமிழ்ப்புலவர் க.ஐயாறுப்பிள்ளை | 209 |
| பலவான்குடி ஸ்ரீ குமாரவிநாயகர் துதி | வித்துவான் மு. முத்துப்பிள்ளை | 324 |
| பலவான்குடி மணிவாசக சங்கத் திருவிழா | பத்திராசிரியர் | 76 |
| பனையின் பிரயோசனம் | ... நல். கண்ணப்ப முதலியார் | 353 |
| பூனா ஒப்பந்தத்தில் ஆலயப் பிரவேசம் அடங்கவில்லை | பத்திரிகைக் கொய்வு | 270 |
| பெயரும் பொருளும் | ... க. ராஜமாணிக்கப்பிள்ளை | 391 |
| பெரியார் அருட்செயலும் காந்தியார் மருட்செயலும் | இலக்குமண சுவாமிகள் | 313 |
| பெருஞ்சித்திரனார் | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார். | 429 |
| பேருரை | பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் | 44 |
| பொங்கற் பொன்னாள் | ... மணி. திருநாவுக்கரசு முதலியார் | 238 |
| பொதுவுடைமை | ... மெ. குப்புசாமி | 382 |
| போத்திபூசை | ... " | 381 |
| மகாத்மாக்களும் ஆலயசேவையும்... | "ஞானஅரசு" | 268 |





| | | |
|---|---|---|
| மகாமக மான்மியம் | பூரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமுகம் | 283 |
| மகாராஜா துறவின் மாட்சி | ... பத்திராசிரியர் | 203 |
| மணிமேகலை | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார். | 306, 341 |
| மதிப்புரை மஞ்சரி | பத்திராசிரியர், | 244, 317, 358, 399, 423. |
| மயிலுக்குத்தோகைவந்த வரலாறு... | லெ. நாராயணையர் | 356 |
| மார்கழி மாதம் திருவெம்பாவை | ... சி. சுப்பிரமணிய ஐயர் | 198 |
| முத்தமிழ் முறை | ... தி. மு. செந்திநாயகம் பிள்ளை | 145 |
| மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத்தொடங்குதல் | பத்திராசிரியர் | 281 |
| மேனாட்டு ஸ்திரீகளின் குடும்ப வாழ்க்கை விபரீதம் | பூரி ஜகநாதம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் | 354 |
| வர்ணதர்மம் | காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் | 249 |
| வரலட்சுமி விரதபலன் | ... நல். கண்ணப்பமுதலியார் | 428 |
| வரவேற்பு | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | 106, 129 |
| வரவேற்புரை | ... ந. மு. வேங்கடசாமி நாட்டார் | 89 |
| வரன்முறை | ... மெ. குப்புசாமி | 338 |
| விநாயகசவுத்தி பூஜாவிதி | ... நல். கண்ணப்பமுதலியார் | 9 |
| விநாயகரிடத்திற்குட்டிக்கொள்ளுதல் ... | " | 70, 99 |
| வினா | ... விடைவிரும்பி | 267 |
| " | ... வீரவைணவன் | 407 |
| வீடு அடைய வழி | காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குருசங்கராசாரியசுவாமிகள் | 398 |
| வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும். | க. ராஜமாணிக்கப்பிள்ளை | 294 |
| வேண்டுகோள் | ... பத்திராதிபர் | 43 |
| வேளாளர்க்கு ஓர் அறிவுறூஉ | ... சைவன் | 179 |
| வைத்தியமுறை | ... எஸ். ஆர். அத்தியப்பன். | 228 |


* இவ்வாண்டில், சங்கரலிங்க உலா என்னும் பழமையான நூல், மறைத் திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன் முற்றும் வெளிவந்துள்ளது.

* திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா ஷை ஐயரவர்களின் குறிப்புரை முதலியவற்றுடன் இரண்டு பாரங்கள் (16 பக்கங்கள்) வெளிவந்துள்ளன.

## பலவான்குடி சிவநேச நிலையத்தில் கிடைக்கும் புத்தகங்கள்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| சிவஞானபோதச் சுருக்கம்: உயர்திரு வாலையானந்த சுவாமியவர்கள் திரட்டிப் பதிப்பித்தது. | ... 0–12—0 |
| சித்தாந்தப்படப்புத்தகம் படமும் சேர்ந்தது: உயர்திரு வாலையானந்த சுவாமிகளியற்றியது. | ... 4—0—0 |
| நாஞசீவவாதக் கட்டளை விளக்கச் செய்யுள்: இராமநாதபுரம் திரு. ப. முனியாண்டி பிள்ளை யவர்களியற்றியது. | ... 0—8—0 |
| கண்ணப்பர் கலம்பகம்: புதுவை திரு. வீ. துரைசாமி முதலியாரவர்களியற்றியது. | ... 0—3—0 |
| பர்த்துருகரியார் சரித்திரம்: கடிகை நமச்சிவாயப் புலவரியற்றியது. | ... 0—8—0 |
| திருஞானசம்பந்தர்தேவாரம் (சைவசித்தாந்த மகா சமாஜ வெளியீடு காலிகோ பயிண்டு) | ... 1—0—0 |
| ஜீவகாருணிய வொழுக்கம். ஆசாரக்கோவை மூலமும் உரையும். } | ... இனம். |
| "சிவநேசன்" ஆறும் ஆண்டுத்தொகுதி 460 பக்கங்கொண்டது (காலிகோபயிண்டு) | ... 3—0—0 |

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ || பலவான்குடி—ஸ்ரீமுக–ஆவணி || திங்கள் க

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## பொருடனைப் போற்றிவாழ்.

இது, நமதுஅருள்மூதாட்டியராகிய ஔவையாரின் திருவாக்கு. இதன் பொருள், பொருளைக் காப்பாற்றி நல்வாழ்வுற வேண்டுமென்பதே. அப்பொருள் யாதென்பதும், அதனை யெவ்வாறு போற்றி வாழ்தல் என்பதுமே ஆராயற்பாலன. கைப்பொருள் செல்வமெனவும், மெய்ப்பொருள் கல்வியெனவும் வழங்கப்பெறுகின்றன.

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்."

என்றூர் பெரியார். ஆகவே, இவ் விரு செல்வங்களும் உடைமைப் பொருளாகக் கொண்டு போற்றற் குரியவே. இவ் விருவகைச் செல்வத்தினுள்ளும் கல்வியே சிறந்ததென்னலாம். ஏனெனில், செல்வப் பொருளின் திறனை யுணர்தற்கும், அதனை யீட்டுதற்கும், போற்றுதற்கும் உரிய துறையிற் செலவிடுதற்கும் ஆன தன்மைகளைக் கல்வியினுற்றான் பெறுதல் கூடும். ஆனது பற்றியே, "கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி." எனப் பிறுண்டும் கூறினர். மேலும்,

"தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்து திக்கும்
ஜெயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கும் இவையலாற்
செம்பொன்மிகு செல்வ மதுபோல்

வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினால்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்கு றாது
கள்ளரால் திருடவு முடியாது வரவரக்
கனைபலாற் குறைவு றாது
கருணைஞா னந்தழைப்பு மாதலா லுனையிதய
கமலத்தில் வைப்ப தெளிதாம்."

என அநுபவ ஞானிகள் கூறியிருத்தல் கொண்டும், கற்றோர்கள் சென்றவிடமெல்லாம் சிறப்புறுதல் கொண்டும், செல்வப் பொருளினும் கல்விப்பொருளே சிறந்ததென்பது தெளிவாம்.

இவ் விருபொருளையும் ஒருசேரப் பெற்றாலும், இவ்விரண்டிலொன்றைப் பெற்றாலும், பெற்றதைக்கொண்டு அதனாலாம் பிரயோசனத்தை அடைதல் வேண்டும். இன்றேல், பெற்றும் பெறாதவரே யாவர். கல்வியும் செல்வமும் உடலோம்புதற்கென்று மாத்திரம் எண்ணி விடுதலே மடமையாகும். "பொருளுக் குடையவன் இறைவன்; அவ் விறைவன் நமது வினைக்கீடாக நம்மீது கருணையுடன் தந்தபொருள் இதுவாகும்; இதனை அவரது திருவுளத்துக்கு இசையும் வழியே செலவிடல் வேண்டும்; அப்படிச் செய்வதுதான் பொருளைப் பெற்றதின் பிரயோசனம்; பொருள் நம்மை விட்டுப் போகாமுன், நாம் பொருளை விட்டுப் போகாமுன், காலமும் பொருளும் உள்ளபோதே சாலச்சிறந்த வழிகளிற் செலவுசெய்து, ஞாலத்திற் பேரும்புகழும் பெற்று, மறுமைப் பயனுக்கும் ஆதாரமாக்கிக் கொள்ள வேண்டும்.

கல்விப்பொருளைப் படைத்ததின் பயனாக, கல்விப்பொருளானது செல்வப்பொருளைப்போல இவ்வுடலுள் ளளவு மாத்திரமன்றி எழுமையும் தொடர்ந்து மனதுக்கினிய வுணவளித்து இன்பூட்டுதலால், பொன்னினும் மணியினும் சிறந்ததாமெனப் போற்றி, "கற்றதனா லாய பயனென்கொல்?" என ஆய்ந்து, தூய அறிவுருவினனாகிய இறைவனது திருத்தாண்மலரைச் சிந்தித்துவந்தித்துப் போற்றி, அழிவிலாப் பொருளாய் --பழமறைக் கொழுந்தாய்— அமுதவாரிதியாய் விளங்குகின்ற இறைவனது திருவருளாகிய மங்கலப்பொருளையே மாண்புறப்பெற்றுவாழுதல் வேண்டும்.

மங்கலப் பொருளாவது சிவபரம்பொருளையே குறிக்கும். சத்தியை யுடைய சத்தன் எவனோ அவனே சிவன். அவனை நேசித்தே மங்கலப் பொருள் பெற்று வாழுதல் கூடுமாதலின், யாவரும் சிவநேசர்களாக—சிவநேசப் பெருஞ் செல்வர்களாக—திருவருட் பெருஞ் செல்வர்களாக—ஒப்பாரு மிக்காரு மின்றி யுயர்வாழ்வுறச் சிவபரம்பொருளைப் போற்றுவோமாக!



மேலும், நமது சிவநேசனுக்கு ஆறுவதாண்டு நிரம்பி, இத்திங்கள் முதல் எழாவதாண்டு ஆரம்பமாகியிருப்பதால், 'சிவநேசன்' வாசகநேசர்கள், சைவமுந்தமிழுஞ் செவ்விதி னோங்கிச் செழிக்க, சிவநேசனையும்பொன்னென மணியெனப் பொருளெனப்போற்றித் திருவருள் நலம்பெற்றுப் பெருவாழ்வுற வேண்டுகிறோம்.

---

## நூல் வெளியீடு
(இருபா இருபஃது.)

இது, சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்தது. வெண்பா ஆசிரியப்பா ஆகிய இருவகைப் பாக்களாலும் அந்தாதித்தொடையாய் யாக்கப்பெற்ற இருபது பாக்களை யுடைமையால் இப்பெயர் பெற்றது. ஞானசாரியரை நோக்கி மாணாக்கர் நிகழ்த்தும் வினாக்களின் தொகுதியாகிய இவ் வறிவு நூற்குத் திருநெல்வேலிப் பேட்டை, திருவாளர் ஆ. ஈச்சுரமூர்த்திப் பிள்ளையவர்கள் விளக்கமான பதவுரை வரைந்து,நமது சிவநேசனுடனிணைத்து இத் திங்கண்முதல்வெளியிடவுதவி யுள்ளார்கள். பதவுரையுடன் பொழிப்புரையும், கடாவிடையுள்ளுறுத்த அகலவுரையும் அமைந்திருத்தலின், இப்பதிப்பு இந்நூற்பொருளை யாவர்க்கும் எளிதி லுணர்த்தும் ஏற்றமுடைத்தாயிலங்குகின்றது. இதன் உரைப்பகுதியின் பதிப்புரிமை உரையாசிரியருக்கே யுள்ளது. இதனை வெளியிட வுதவிய திரு. பிள்ளையவர்கட்கு மிகவும் நன்றிகூறுகின்றோம்.

## மதிப்புரை.

### திருவிளையாடற் சரண மஞ்சரி.

பள்ளத்தூர் திரு. அ. மு. ப. அ. மு. முருகப்ப செட்டியாரால் யாக்கப்பெற்றது. பசுபதியாகிய பரசிவப் பெருமான் பக்திச் சுவைநனி பரந்துவிளங்கும் திருவிளையாடற் புராணத்தைத் தமது இளமைப் பருவந்தொடங்கியே அன்புடன் பாராயணஞ் செய்து வரும் திரு. செட்டியாரவர்களின் மனமலர்ந்து இம் மஞ்சரிவடிவுற்றதாகக் காணப்பெறுகிறது. திருவிளையாடலை நித்திய பாராயணம்செய்வோர்க்கு இச் செஞ்சொன் மஞ்சரி சிறந்த துணையாமென்பது எமது கருத்து.

### திருஞானசம்பந்தர் பதிகம்.

கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாரால் இயற்றப்பெற்ற பத்துப்பாக்களையுடைது. திருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாற்று முறையைத் தொகுத்துக் கூறிப் போற்றியுரைப்பது. பாக்கள் செம்பாகமாய்ச் சுவைநலமிக்கு மிளிர்கின்றன.

[சரணமஞ்சரி சம்பந்தர்பதிகங்களின் பிரதிகளை நமது பார்வைக்கனுப்பிய நண்பர்கட்கு மிகவும் நன்றிபாராட்டுகிறோம். ப—ர்.]

உ

# திருக்கோயிலதிகாரிகள்

(திருச்செங்கோடு சிவஸ்ரீ அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் அவர்கள்.)

உலகத்தில் உயர்ந்த மனிதர்களெல்லாம் ஆஸ்திக மதத்தர்களே. தென்னந் தோப்பு என்பதனுள் வேறு சில மரங்களும் இருப்பதொப்ப, நாத்திகர்களும் இருப்பர். தெய்வ நம்பிக்கையுள்ளவர்களெல்லாரும் கடவுளை வணங்குதற்கு இடமும் காலமும் அமைத்துக் கோடல் பொதுவியல்பே. நமது சைவாகம முறைப்படி அமைத்துள்ள திருக்கோயில்களோ, சர்வ வியாபகமுள்ள இறைவரது கண்ட அகண்ட சொரூப லக்ஷணங்களைத் தூலவகையால் விளக்கிக் காட்டக்கூடியன. கோபுரங்கள்—கோபுர வாயில்கள்—விமானங்கள்—பிரகாரங்கள்—துவஜ ஸ்தம்பம்—பலிபீடம்—நந்தி—மகா மண்டபம்—அர்த்த மண்டபம்—அந்தராளம்—திரை—கர்ப்பக் கிரகம் (மூலட்டானம்) முதலானவைகளும், பிரதானமூர்த்தம்—பரிவார மூர்த்தங்கள் ஆகியவைகளும் தத்துவங்களையும்பேதாபேதங்களையும் காட்டுவனவாகும்.

கர்ஷண முதல் பிரதிட்டை வரையும், பிரதிட்டை முதல் உற்சவம் வரையும், உற்சவமுதற் பிராயசித்தம் வரையும் செய்யப்பெறும் காரியங்களும், ஜெபிக்கின்ற மந்திரார்த்தங்களும், சகள நிட்களத் தன்மை—ஜீவேசுவர வொடுக்க மாதியவைகளைக் குறிப்பனவாகும்.

மூர்த்திகளுக்குச் செய்யும் அபிடேக அருச்சனை ஆராதனை நைவேத்தியம் ஆகிய உபசாரங்களெல்லாம் தத்துவார்த்தங்களோடு கூடியனவே. இவைகளின் ஒவ்வொரு பாகங்களையும் விவரமாகப் பிறர்க்குச் சொல்பவர் வேதம், ஆகமம், இவைகளின் கிரியாபாத மாத்திரமல்ல ஞானபாதத்தையும் ஐயந்திரபறத் தெரிந்தவராயிருக்கவேண்டும்.

அலங்காரத்தோடுகூடிய இறைவனது திருவுருவத்தில் கண்களின் பார்வை பதிந்தும், சாம்பிராணி மட்டிப்பால் முதலிய புகை வாசனைகளை மோந்து மூக்குச் சொக்கியும், வேதமந்திரம் கீதவாத்தியாதிகளைக் கேட்டுச் செவிஇந்திரியம் சொர்ந்தும் போகின்றன. கொடியபாம்பும், பசுவாதி மிருகங்களும் ஸ்வரத்தோடுகூடிய கீதத்தால் செயல் மறந்து மனநிலையுற்றுளவென்றால், பகுத்தறிவுள்ள மக்கள் மன ஒடுக்கம் பொருந்தல் அதிசயமாமோ? இதனால், ஆலயங்களின் அமைப்பும் மூர்த்திகளும் பூஜை முதலியவைகளும் அவைகளுக்கு உரித்தாக அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களும் தத்வங்களும், ஜீவேசுர ஒடுக்கமும் மனோலயம் பெறும் மார்க்கமுமாக விளங்குகின்றன. கோயிலும், கோயிலுள் நடக்குங் காரியங்



களும், ஒவ்வொரு பொருள் விளக்கத்தையும் மன ஒடுக்கத்தையும் காட்டுவதும், மனநிலை பெறுமாறு கூட்டுவதுமாக இருக்கின்றன. ஆதலால், கோவில் அமைப்பும் செய்யும் கிரியையும் செய்யவேண்டிய காரணமும் விவரமாக விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது கோயில் அதிகாரிக்கு அவசியமானது. இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த கோயில்களின் ஆராதனை முதலியவைகளைச் சரிவர நடக்கும்படி மேல்விசாரணை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளவர்களின் புண்ணியப் பேற்றை எவ்வளவென்று கணக்கிடலாகும்? அடையும் பலன் எவ்வளவு மேன்மையுள்ளது? இந்த அதிகாரத்தைக் கொள்பவர்கள், சைவராய், சைவசித்தாந்த சாஸ்திர நூல்களைக் கற்றவராய், பத்தியுள்ளவராய், விதிவிலக்குகள் தெரிந்து விவேகம் பொறுமையுடையவராய், சிவஸ்தல யாத்திரை தீர்த்தயாத்திரை செய்பவராய், ஜாதிசமய ஒழுக்கம் நற்குண நற்செய்கையுடன் நடுவு நிலைமையுள்ளவராய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஊழியம் புரிந்து ஊதியம் பெறும் ஏழைகளும் அதிலொரு தினையளவாவது கோயிலுக்குக் கொடுத்தே வருகின்றனர். இன்றியமையாத இவ் வாலயங்கட்கு முட்டுப்பாடு நேராமல் பண்டைய அரசர்களும் புண்ணிய சீலர்களும் பொன்னும் பூமியும் வழங்கியிருக்கின்றனர். கந்தாயத்தைக்கொண்டு நியமமாக பூஜை முதலியன நடந்து வரும்படி செய்வதுதான் கோயில் அதிகாரிகளின் கடமை. இவ் வதிகாரம் புத்திர சந்தானமாகவோ சிஷ்ய சந்தானமாகவோ பரம்பரையாகப் பார்த்து வரத்தக்கது ஒன்று; அவ்வவ்விடத்து ஜனங்களாலே தெரிந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவது மற்றொன்று; ஆக இரண்டு பிரிவாகும். ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் அதிகாரியாக பகீரதப் பிரயத்தனஞ் செய்பவர்களில், ஆலய கைங்கரியங்கள் சரியாக நடத்தவேண்டுமென்ற கருத்துள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் இருப்பினுமிருப்பார்கள். மற்றவர்களெல்லாம் தங்களுக்குச் செல்வாக்கு வேண்டும், தேவடியார், மேளகாரர், சிப்பந்திகள் தமக்கு ஊழியர்களாகவேண்டும், தாம் செய்யும் பழிபாவங்களை மறைத்துப் புகழவேண்டும், சமயம் நேர்ந்தால் விரோதிகளைச் சதிசெய்ய அல்லது அவமதிக்கச்செய்ய—பொய்ச்சான்று புகல உதவவேண்டும் என்றெல்லாம் கெட்ட எண்ணமுடையவர்களாய், கௌரவ நிலை கருதி மேற்கொண்டவர்களும், கோயிற் பணத்தைச் சொந்த உபயோகப் படுத்திக்கொள்ளுபவர்களும் ஆவர். இவ் விருவகையினருமன்றி பெரியோர்கள் பெற்றுள்ள ஸ்வதந்திரத்தை விடக்கூடாது என்ற எண்ணத்துடன் கோயிலதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர்களும், திரவியத்தை அபேக்ஷியாவிடினும், பிறர் பொருள் கவர்வதைக் கண்டும் பரிகாரந் தேடாமலும், சீர்கேடாக நடப்பதைத் திருத்தி ஒழுங்குபெறப் பூஜை முதலியன செய்விக்காமலு மிருப்பர். எவ்

வாற்றானும் கோயிலதிகாரிகள் இம்மைப் பயனையே குறிக்காது செம்மை சிறக்க மாபூஜை செய்விப்பவரே சிறப்புடையாரென்பதும் அங்ஙனம் செய்யாதவர்களின் கதி யாதாம் என்பதும் சிந்திக்கற்பாலன.

இம்மைப் பயனைக் குறியாதே யிறைவன் றிருவா லயமதனுட்
செம்மை சிறக்க மாபூசை செய்விப் பவரே சிறப்புடையரா
இம்மைப் பயனைக் குறித்தியற்று மதிகா ரியர்நா யுடலெடுப்பர்
புன்மைப் புலைய னெனுமுடலும் பெருந்தி விடுவர் புகழினையே.

எனச்சிவதருமோத்தரம் கூறுதலால், திருக்கோயி லதிகாரிகளாவார் எவரும் நான்முறை தெரிந்து சீலத்தொழுகுதலே சாலச் சிறந்ததாகும்.

---

# திருக்கடைக் காப்பு.

சைவசமயாசாரிய சுவாமிக ளருளிச்செய்த திருமுறைகளில் திருஞானசம்பந்த மூர்த்தியும் சுந்தரமூர்த்தியும் திருக்கடைக்காப்பு அருளியவாறு, ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளும் ஸ்ரீமந் மணிவாசக சுவாமிகளும் திருக்கடைக்காப்புச் செய்யுள்க ளருளிச் செய்திருக்கின்றனரா? என்று சில சைவநண்பர்கள் வினவியுள்ளார்கள்.

ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளென்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த நமச்சிவாயத் திருப்பதிகத்தி னீற்றுச் செய்யுளாகிய,

'மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயபத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே' எனவும்,

ஸ்ரீமந் மணிவாசக சுவாமிகள் தாமருளிச்செய்த திருவாசகத்தில் 'நமச்சிவாய வா அழ்க நாதன்றாள் வாழ்க!' என்ற முதலுடைய சிவபுராணத்தில்

'சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து'

எனவும் திருக்கடைக்காப்பும் பலனும்கூறியுள்ளார்கள். இது விஷயம் உயர்திரு சுவாமிநாத பண்டிதரவர்கள் இயற்றிய திருமுறைப்பெருமை என்னும் நூலில் பரக்கக் காணலாம். இவ்வாறே காரைக்காலம்மையார் அருளிச்செய்த திருப்பதிகங்களிலும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலிய திருமுறைகளிலும் திருக்கடைக்காப் பருளிச்செய்திருத்தல் காண்க.

நல். கண்ணப்ப முதலியார்.

---

# தமிழ்க்கல்வி.

மறைத் திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்ட்டர் உ. வே.சாமிநாதையரவர்கள், "இந்து" பத்திரிகையில் எழுதிய தன் மொழிபெயர்ப்பு:—

தற்கால தேசீய நிலைமை மிகவும் வருத்தப்படத்தக்கதா யிருக்கிறது. வறுமையால் வருந்தும் மக்கட் டொகுதி மிகுதியாகக் காணப்படுகிறது. நாகரிகம் நட்பாந்தன்மை நல்லொழுக்கம் ஆதியவை ஓர்பாற் கூடுதலும் மற்றோர்பாற் குறைதலுமாக இருக்கின்றன. படித்தவர்களெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வருந்துகிறார்கள். படிப்புக்கு ஏற்படும் செலவுகள் அதிகமா யிருக்கின்றன. கற்பதற்கு விருப்பமுள்ளவர்களுக்குங்கூட உயர்தரக் கல்லூரிகளில் இடங்கிடைப்ப தரிதாயிருக்கின்றது. இவ்விதக் குறைபாடுகளைத் தேச முன்னேற்றத்துக்காகச் சீர்திருத்தஞ் செய்ய எண்ணப்பட்டிருக்கிறது. இதை யநுசரித்துக் கீழ்ச்சாதி முதல் மேற்சாதி வரை இந்தச் சீர்திருத்த வேலையில் முன்னின்று வேண்டும் முயற்சிகள் செய்யவேண்டும்.

கல்வியானது எந்த வேலைக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. கல்வியே எவ்வழியிலும் சீர்திருத்தத்தைக் கொடுக்கக்கூடியது. இவைகளை முன்னிட்டுக் கற்றறிந்தோர் தாய்மொழி யொன்றினால் மட்டுமே கல்வியின் திறனைப் புகட்ட முடியுமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள். நாளுக்குநாள் தமிழ்க் கல்வியானது, பிரவேசப் பரீக்ஷைகளின் மூலமாகவும், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவாவடுதுறை திருப்பனந்தாள் முதலிய ஆதீனங்கள், இராமநாதபுரம் சமஸ்தானம், தனவைசியர்களால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்கள், செந்தமிழ்—கலைமகள்—சிவநேசன்—சுதேசமித்திரன் முதலான திங்கள் வெளியீடுகள் தினவெளியீடுகள் மூலமாகவும் முன்னேற்ற மடைந்துவருகின்ற தென்பது ஒப்புக்கொள்ளத்தக்கது. என்றாலும், கல்வி யறிவில்லாதவர்களுக்கு அவசியமான கல்வியைக் கொடுக்க இன்னும் போதுமான தமிழ் மத்தியதரக் கலாசாலைகள் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

இப்பொழுது சென்னைப் புத்தகாலய பிரசார சங்கத்தார் அதிசீக்கிரத்தில் தமிழன்பர் மகாநாடு ஒன்று கூட்டப்போவதாகவும், அம் மகாநாட்டில் தமிழ்க் கல்வியின் சில முக்கியமான விஷயங்களையும் இன்னும் உபயோகமான சில ஆக்க வேலைகளையும் மேற்கொண்டு உழைப்பதற்கானவைகள் தீர்மானிக்கப்பெறுமெனவும் தெரிகிறது.

தேசத்தின் தற்கால நிலைமையை யெண்ணி இது விஷயமாய் வேண்டும் முயற்சிக ளெடுத்து முன்னுக்குக் கொண்டுவரும்படி எல்லோரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சென்ற சில வருடங்களாக மேற்கண்ட சங்கத்தின் அங்கத்தினர்களால் செய்யப்பட்டுவந்த உதவியானது, அநேகருடைய முயற்சியைத் தவறாமற் கவருமென்பதில் ஐயமில்லை.

ஆகையால், தமிழன்பர் எல்லோரும் ஜீவதசையில் எவரெவர்கள் எங்கெந்த வேலையி லீடுபட்டிருந்தபோதிலும், அவர்களெல்லோரும் இப்பெருமுயற்சியி லொன்றுசேர்ந்து, தேச முன்னேற்றத்திற்கு வேண்டுவன செய்வார்களென நம்புகிறேன்.

---

௨

# வாழ்நாள் வழியடைத்தல்.

மறைத் திருவாளர் வ. மு. இரத்திநேசுவரையரவர்கள்.

இவ்வுலகின்கண் மக்களாய்ப் பிறந்தார்க்கே நன்று தீது ஆயும் பண்புஉண்டு. அவருள்ளும் அறிவு நிகழாதார் விலங்கின் வேறாகார். கலையறிவானன்றி உயரறிவு தலைப்படமாட்டாது. நமது நாடுகளில் செந்தமிழ்க் கல்வி நிலையங்கள் பல தோன்றவேண்டும். சமயவுண்மை மாந்தர்க்கு அவசியம் போதிக்கப்பெறவேண்டும். சமய பாடமின்றி, பிழையின்றிய பாட புஸ்தக போதனையின்றிக் கல்வி போதிக்கப் பெறுகின்றது. எல்லாம் போர்டுஸ்கூல். இத்தகைய எழுத்தறிவிக்கும் நிலையங்களாவது வந்ததே போதும்! 'சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்திற் றாலி போதாதா?'' என்கிறார்கள். சரிதான். எழுத்துக்களையாவது பிழையற இப் பள்ளியின் உபாத்தியாயர்களில், உபாத்தியாயனிகளில், . பற்பலருக்கு எழுதத் தெரியாதே! என் செயலாம்? பாவம்! பாவம்!! கல்வியறிவால் நன்று ஆற்றின் வாழ்நாள் நன்கு கடந்து இன்புநெறி சாரலாம். தருமத்திற்குக் கேடு செய்வோர் மக்களாக மதிக்கப்பட நீதியுண்டா?

> வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்.

தருமங்கள்பல. நாம் தருமஞ் செய்யாவிடினும் நம் சகோதரர்களால் நடாத்தப்பெறுகின்றவற்றிற்கு உறுதுணையாக நிற்பதே நலம். துணை புரியாதொழியினும் கெடுதி செய்யாவிட்டாலே போதும். நடை வழியை அடைவழியாக்கும் அறத்திற்கு மறம் என்றுதான் சொல்லலாம். வழியில் முள்ளுஇட்டால் வீடும் முள்ளால் நிறையுமன்றோ? சாலையை இட்ட சீரியோர் செயலைப் போற்றுவது புண்ணியமல்லவா? துக்கம்வந்தால் 'இளைவழியில் முள்ளிட்டேனே' என்றுதான் பரிதபிக்க நேரிடும். ஆகலின், நல்லறம் புரிந்து நாடரு மின்புகூட நாம் முன்னுவோமாக.

---

> நிலத்துக் கனியென்ப நெல்லுங் கரும்பும்
> குளத்துக் கனியென்ப தாமரை பெண்மை
> நலத்துக் கனியென்ப நாணம் தனக்கனி
> தான்செல் லுலகத் தறம்.

(நான்மணிக்கடிகை.)

௨

# பத்தினிக் கடவுள்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

முற்காலத்து நம்நாட்டு வாழ்ந்த பத்தினிப் பெண்கள் பலருள்ளும் சிறந்து விளங்கியவள் "கண்ணகி" என்னும் கவினிய மங்கையே யாவாள். அவள், கடவுளாகப் பூசிக்கப்படுகிறாளாதலின், "பத்தினிக்கடவுள்" எனப் பெயர் பெற்றனள்.

சோழநாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்ததும், காவிரிநதி கடலொடு கலக்கும் பெருமை வாய்ந்ததும், முற்காலத்துச் சிறந்தகடற்றுறைப் பட்டினமாக விளங்கியதும்; வைசியமரபினர் மாண்புடன் வாழ்ந்ததும், 'பூம்புகார்' என்னும் பெயர் வாய்ந்ததும் ஆகிய காவிரிப்பூம்பட்டினத்தில், இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், இப்பர், கவிப்பர், பெருங்குடி என்ற வாணிகர் மூவருள், பெருங்குடிமரபில் உதித்த "மாசாத்துவான்" என்பான் வாழ்ந்து வந்தான். அவனுக்கு, "கோவலன்" என்பானோர் புத்திரன் இருந்தான். அதுகாலை அங்கு வசித்து வந்த வணிகர் மரபினனாகிய "மாநாய்கன்" என்பான், தன் அருந்தவத்தாற் பெற்ற "கண்ணகி" என்னும் மகளுக்கு விவாகத்திற்குரிய பருவம் வரவே, கண்ணகிக்கிசைந்த கணவன் கோவலனே எனத் துணிந்து, கோவலனுக்குக் கண்ணகியைமணஞ்செய்வித்தனன். இல்லறத்திற் கின்றியமையாத அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல். விருந்தெதிர்கோடல் முதலிய கைக்கொண்டு, கோவலனும் கண்ணகிபால் அளவில்லாத அன்புடையோனாய்,

> "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
> காசறு விரையே! கரும்பே! தேனே!
> அரும்பெறற் பாவாய்! யாருயிர் மருந்தே!
> பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
> மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
> அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
> யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
> தாழிருங் கூந்தற் றையா! நின்னையென்
> றுலவாக் கட்டுரை பலபா ராட்டி"

இல்லறவாழ்க்கை இனிது நடாத்தி வந்தனன்.

அக் காலத்தில் அப் பட்டினத்தில் வாழ்ந்தவளும்,

> "மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
> தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவள வல்லிக்
> கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
> றானிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ வென்ன"

ஐயுறத் தக்கவளும், பாத்தையர் குலத்தி லுதித்தவளுமாகிய "மாதவி" என்னும் மங்கை, ஆடல், பாடல் முதலியவைகளில் தேர்ச்சி யுள்ளவளா யிருந்

தமையறிந்து, அவள்பால் மோகமுற்றுத் தன் கற்பின்மேம்படு காதலியை மறந்து, தன்னிடத்துள்ள பொருள் முழுமையும் மாதவிக்கே கொடுத்து, அவளுடன் வாழ்ந்து வந்தான் கோவலன். கண்ணகி அதனல் மிகவருத்த முற்ருளாயினும், அதனை வெளிக்காட்டாது இல்லறத்திருந்து கற்பு நெறி வழுவாது வாழ்ந்துவந்தனள். இதுநிற்க:

அப் பட்டினத்தில் ஆண்டுதோறும் சோழ அரசர்களால் நடத்தப் பெறும் இந்திரவிழா ஆரம்பமாயிற்று. இவ் விந்திரவிழாவின் வரலாறு,

"உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவ னுங்கது நேர்ந்தது"

என மணிமேகலை கூறுகின்றது. முற்காலத்துப் புகார்நகரத்தை யாண்ட 'தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்' என்னுஞ் சோழனிடத்து 'திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி' சென்று, நின்நாட்டை வளப் படுத்துவாயாக' எனச் சொல்லினர். அதுகேட்ட வளவன், நாடு வளம்பட வேண்டுமேல் மழையின் உதவி வேண்டத்தக்கது. ஆதலின், மழைக்குத் தலைவனாகிய இந்திரனுக்கு விழவெடுப்போமானல் நாடுவளம்பெறும் என்ற கருத்துடன் விண்ணவர் உலகம் நண்ணி இந்திரனிடத்து 'ஐயனே! நினக்கு எந்நாட்டில்இருபத்தெட்டுநாட்கள் விழவெடுக்க நிச்சயித்துள்ளேன். அதற்கு ஆங்கெழுந்தருளி யிருக்கவேண்டும். என்று வேண்டிக்கொள்ள இந்திரனும் இசைந்தனன். அதுமுதல் ஆண்டுதோறும் இந்திரவிழா எடுத் தலைச் சோழ மரபினர் கைக்கொண்டன ரென்பது தெரிகின்றது.

இனி, இந்திரவிழா நடைபெறப்போதலைமுரசறைவோன் யானைமேல் முரசைஏற்றி முதலில் 'பட்டினம் யாழ்க' எனவாழ்த்தி, 'வான மும்மாரி பொழிக, மன்னவன் கோனிலை திரியாக் கோலோனுகுக' எனக்கூறி விழா நடைபெறப் போதலை அறிவித்தனன். அதுகேட்ட நகரமாந்தர்கள் மிகக் களிப்படைந்தவர்களாய், 'பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது, தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின், வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி, காய்க்குலைக் கமுகும், வாழையும் வஞ்சியும், பூக் கொடி வல்லியும் கரும்பும் நட்டு, நிறைகுடமும், பொற்பாலிகைகளும், பாவைவிளக்கும் வைத்தனர். வீதிகள்தோறும் பழயமணலைமாற்றிப் புது மணல்பரப்பினர். ஆலயங்கள்தோறும் விசேடமாகப் பூசைநடத்தினர். இவ்வாறு நகரமாந்தர் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் திளைக்க, விண்ணவர் தலைவற்கு ஆயிரத்தெட்டுப் பொற்குடங்களில் காவிரிநீர்கொண்டு மஞ்சன மாட்டினர். இவ்வாறு விழா நடத்தி இருபத்தெட்டுநாட்கள் சென்றபின், நகரமாந்தரனைவரும் கடலாடி மருங்கமைக்கப்பெற்ற மாடங்களில் மகிழ்ந் திருந்தனர்.



அங்கு, மாதவியுடன்கடலாடி அவளோடு அளவளாவிக்கொண்டிருந்த கோவலன், அவள்கையிலிருந்த வீணையைவாங்கிக் காவேரியைச் சிறப் பித்து,

"திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி! காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி! காவேரி.

பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முருபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே.

புன்னை நீழற் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்."

என்பன வாதிய பாடல்களைப் பாடினன். அதுகேட்ட மாதவி,"இது காறும் என்பால் பெரிதும் அன்புடையவன்போல் நடித்த இவன் றன்மை இன்றன்றோ புலனாயிற்று" என்று நினைத்துக் கோவலன் வாசித்த உருக் கள், களவில் தலைமகன் கூற்றாதலால், அவன் தன்மேல் அன்பில னென உட்கொண்டு புலந்து, அது தோன்றாமல் மனமகிழ்ந்தாள்போலத் தன்பக் கல் வேறு குறிப்பிலளாயினும் வேறு குறிப்புடையாள்போல அவனுக்குத் தோன்ற வீணையை வாங்கி,

"பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி! காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி! காவேரி.

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
யீர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே.

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லொழித்துப் போனா ரொருவர்
பொய்த லொழித்துப் போனா ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்"

என்பன வாதிய பாடல்களைப் பாடினள். அதுகேட்ட கோவலன், மிக வருத்தமுற்றுக் கானல்வரி யான்பாடத் தானென்றின்மேல் மனம் வைத்து மாயப்பொய் பலகூட்டு மாயத்தாற் பாடினளென நினைத்து, ஊழ்வினை துரப்ப அவளைவிட்டுநீங்கிக் கண்ணகிபாற் சென்றான். மாதவியும் தன் இல்லஞ் சென்று கோவலனின் பிரிவுக் காற்றாது வருந்தி, தன் தோ ழியாகிய "வசந்தமாலை"யை யழைத்து, இப்பொழுதே கோவலனை

இங்கே கொணர்வாயாக!" எனக் கோவலனிடத் தனுப்பினள். வசந்தமாலை கோவலனிடத்துச் சென்று மாதவியின் பிரிவாற்றாமைத் துன்பத்தை அறிவிக்க, நாடகக் கணிகையாதலால் வஞ்சமன முடையவளாயும், உள்ளூற அன்பில்லாதவளாயு மிருக்கிறாளென மறுக்க, வசந்தமாலை மாதவிபாற் சென்று கோவலன் உள்ளக்கிடக்கையை உரைத்தனள். மாதவி, ஒருவாறு தேறி இன்று மாலை வராவிட்டாலும் நாளைக் காலையாவது வருவானென்ற எண்ணத்துடன்,

"மலரமளித் துயிலாற்றாள் வருந்தென்றல் மருங்காற்றாள் மங்குல் வானி
னிலவுமிழுந் தழலாற்றா ணிறையாற்றும் பொறையாற்றா ணீர்மை யாகிக்
கலவமயி லெனவெழுந்துங் கருங்குழலின் பரமாற்றாக் கைய ளாகிப்"

பூப்பாயலில் வதிந்தனள். இஃதிவ்வாறாக:

கண்ணகி, வீட்டில் தன் தோழியாகிய தேவந்தியினிடத்தில்,

"கடுக்குவன் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
யிட்டனர் ஊரா ரிடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்"

என்று தனக்குற்ற தீக்கனவைக் கூறிக்கொண்டும், அதற்கு அவள் சொல்லிய சமாதானங்களைக் கேட்டுக்கொண்டு மிருந்தனள். அதுகாலை கோவலன் வருகிறானென்று குற்றேவல் செய்யும் மங்கை கூற, கோவலனும் கண்ணகியின் சயன அறை சென்று, அவள் சரீர வாட்டத்தையும் மனவருத்தத்தையு மறிந்து, "பொய்யை மெய்யாகக் காட்டி ஒழுகும் பரத்தையை மருவி வாழ்ந்ததால், முன்னோராற் கிடைத்த செல்வமெல்லாம் நீங்க வறுமையை யடைந்தேன். அதனால் மிக்க நாணுறுகின்றேன்." எனக் கூறினன். கண்ணகி, நலங்கேழ்முறுவல் நகைமுகங்காட்டி, மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லை யென்ற வருத்தத்தால் இங்ஙனம் கூறினானோ என நினைத்து, "அன்பரே! என்னிடத்தி லிரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருளுக" என்றனள். கோவலன், "பெண்ணே! இச்சிலம்பைக்கொண்டு மதுரைநகர் சென்று விற்று வாணிபஞ் செய்ய எண்ணியுள்ளேன். ஆதலின், நீ இப்பொழுதே என்னுடன் புறப்படுவாயாக" என்றனன். பின்பு, கண்ணகியையும் அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான்.

புறப்பட்ட கோவலன் காவேரியின் வடகரை வழியாக மேற்கே சென்று, அங்கோர் பூஞ்சோலையில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகத சமயத்து முதியோளாகிய "கவுந்தி"யைக் கண்டு, அவளும் உடன் வருவேனென்று சொல்ல, அழைத்துக்கொண்டு காவேரியின் தென் கரையை யடைந்து ஓர் சோலையில் தங்கியிருந்தான். அதுபோழ்து கோவலனையும் கண்ணகியையும் அவமதித்துப் பேசிய ஓர் பரத்தையையும் ஓர் தூர்த்தனையும், நரிவடிவமாகும்படி கவுந்தி சபித்தனள். பின் மூவரும் உறையூரை அடைந்தனர். [தொடரும்.]

---

# சிவத்தின் இயல்பு.

சுதுமலை அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.

சிவத்தி னியல்பைத் தெளிந்திடு மாயி
னுவப்புறு ஞானமு முயரின் பமுமாம்
ஞானமென் பதனை நாடிடிற் சத்து
மூனமில் சித்துமா முறும் ரியல்பாய்ச்
சத்தது காரிய காரணப் படாது
நித்தமோர் படித்தாய் நிற்பதாஞ் சித்து
உணர்த்த உணர்தலை யொழிந்தது தானே
தணிப்பில் சுயம்பிர காசமாய் நிற்பது
இவ்விரு தன்மையு மெம்மிறை காட்டு
மெவ்வமில் விசேட மெழிலா ரியல்பாம்
அதனால் ஞானமென் றறைந்திடு நூலே
தத்துவா னந்த மூறையிய லுரைக்கின்
சர்வஞ் ஞத்துவம், சாருறு திருத்தி
நிராம யான்மா, நிகழ்சுவ தந்திரம்
அநாதி போதம், அலுத்த சத்தியோ
டநந்த சத்தி, விசுத்த தேகமென்
றெண்குண முடைமையா யியம்புவர் மேலோர்
எண்படு சிவத்தி னியல்பல குணங்கள்
மன்னுயிர் மாட்டுள மாகரு ணைக்குணம்
தண்ணளி யார்பரா சத்தியாய் வைகும்
அக்குணம் வசப்பட் டாங்குறு சிவத்தை
தொக்கவந் நிலையிற் சொல்லுவர் பதியாய்
அப்பதி சமூகத் தமர்வுறு மூலகம்
ஒப்பிலைந் தொழிலா யொழுகுமவ் வைந்தொழில்
நிகழ்தற் கதுவாய் நின்றவப் பதியின்
புகழ்பெறு சத்தியைப் பொருவிலா வாதிமற்
றிரோதா யியதாய்ச் செப்பிடும் நூலே
பதியுமவ் வாதி பண்புறு சத்தியும்
கதிரவ னும்மதன் கதிரும்போ னிற்கும்
சூரியன் முன்னரே துய்யவக் கிரணம்
சார்விசே டத்தாற் றாமரை யரும்பலும்
அலர்தலும் புலர்தலு மாஞ்செயற் பாடுகள்
பலவுள நிகழும் பான்மையைப் போல
பதியது சமூகம் பாரது தோன்றி

முதிருற வழியும் முறையினை யடையும்
சிறிய வுவமையிற் செய்யதா மரையின்
சாருறு விகாரமுந் தானடை யாமை
ஒருறு மனதி லுய்த்துண ரப்படும்
இன்னுமிவ் வுவமையி லினனுடை கிரணம்
பன்னுறு விகாரப் படுதலின் றுகும்
ஆங்கது போல ஆதியாஞ் சத்தியும்
பாங்கமர் விகாரம் படைத்தலின் றுகும்.

---

"சிவநேசன்" ஏழாவதாண்டு

# வாழ்த்தும் மதிப்புரையும்.

யாழ்ப்பாணம் வண்கிழக்கு திருவாளர் சி. மு. சின்னத்தம்பிப் பிள்ளை யவர்கள்:—

வாழ்க! வாழ்க!! சிவநேசன் வாழ்க!!!

புகழுறத் தோன்றிய புண்ணியத் தலைவ!

சைவத் தமிழுலகிற்குத் தாங்களும் தங்கள் மரபினர்களும் செய்து வருகின்ற பயன்றூக்கா வுதவி பலவற்றுள்ளும் தலையாய தங்கள் சிவப்பணிக்கு இணை யாவுள?

வேதமூர்த்தி மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் முதலாய பெரும் பேரறிஞர் பலர் வாழ்த்திப் போற்றிய சிவநேசனுக்கு எனது வாழ்த்தும் உரிமையுடைத்தாகுக.

"........இப்பார்
செய்புறவன்மால்உமைபூசைகொள்தேவதேவன்
வையத்தவர்செய்வழிபாடும்மகிழுமன்றே."

என்றபடி.

* * * *

கொ. இலக்குமிபுரம் சிவஸ்ரீ K. P. சுப்பிரமணிய சிவாசாரியாரவர்கள்:—

"சிவநேசன்" பத்திரிகை கண்டு பேரானந்தம் உறுகின்றேன். அதனுட் காணும் சாஸ்திரசார அருவி எனதறிவிற் பாய்ந்து பயன் விளைவிக்கின்றது. தீயோர், வேதசாஸ்திர முதலான நிந்தைகளையே மேற்கொண்டு காட்டுத் தீயைப் போலக் கனன்று பரவுகின்ற இத்



தருணத்தில், தங்கள் பத்திரிகையில் வரும் சாஸ்திரமழைப் பிரவாகமானது, அக் கொடிய தீயினை யணைத்து,நன்மக்க ளறிவிற் பாய்ந்து செழிப்புறச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய சிவபுண்ணியத்திற்கு எய்தப்பெறுங் கைம்மாறு இன்பவீடே. அதனையுதவுவான் இறைவனே யாதலின், அவன் திருவடியைப் போற்றுவாம்.

* * * *

ஆவினிப்பட்டி, விவேகானந்தர் கல்விக் கழக ஆசிரியர் யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர், திரு. வ. மு. இரத்திநேசுவரையர் அவர்கள்:—

1. செம்மைச் "சிவநேசன்" தெய்வத் திருவருளை
இம்மைப் பிறவிதனி லெய்தவே—நம்மைத்
தவநெறியிற் சார்விக்கத் தக்கமதி வந்து
சிவனருளால் வாழ்க! சிறந்து.

2. பார்வளர் சைவத் திறமிக மேதினி பண்டுசெய்த
நீர்வளர் பூசா பலத்திறன் மிக்கு நிறைந்தவன்றே
சீர்வளர் பேர்ராம சாமிப் பெருந்தகை தேர்ந்தளித்த
ஏர்வளர் நற்சிவ நேசனெம் முன்ன ரிலகியதே.

* * * *

கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்:—

புவநேசன் கண்ணுதலோன் புங்கவர்கள் தொழுமீசன்
போற்று மன்பர்
பவநேசங் கடிந்தருள்செய் பண்ணவன்சீ ரடியர்செயும்
பழுதி லாத
தவநேசன் இளமதிசேர் சடையினன் தாமரைத்தா
டலைமேற் கொண்டு
சிவநேசன் பத்திரிகை நீடூழி வாழ்கவென
சிந்திப் பாமே.

* * * *

தென்னாற்காடு ஜில்லா எஜுகேஷன் கௌன்சில் மெம்பரும், திருக்கோவலூர் தாலுக்காபோர்டு மெம்பரும் ஆகிய கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்:—

1. சீர்வளர்ந் தோங்கு மிந்திய நாட்டிற்
றென்றிசை பயின்றமா தவத்தால்
கார்வளர்ந் தோங்கு மணிமிடற் றண்ணல்
கண்டிநற் சைவமு நீறும்

பேர்வளர்ந் தோங்கித் தமிழ்மணங் கமழப்
பெரிதுநல் லறிஞர்க ளுவப்ப
ஏர்வளர் பலவான் குடியினிற் றோன்று
மெழில்சிவ நேசன்வா ழியவே!

2. வாழியிவ் வேழா மாண்டினு முன்போல்
மதிதொறுஞ் சோமநாட் டோன்றி
வாழிநல் லறிஞர் கட்டுரை வியாசம்
வாழ்த்தொடு செய்திக டாங்கி
வாழியிங் கிதனை வளர்க்குமா சிரியர்
மன்னுறு மிராமசா மிப்பேர்
வாழிமெய் விடய தானஞ்செய் பவர்கள்
வாழிசந் தாதரும் பெரியோர்.

3. பெரியர்கள் கூறு மாசிநன் மொழியால்
பிறழ்ந்திடா தொளிர்கதி ரேபோல்
விரிவுடன் ஞானச் சுடரொளி பரப்பி
வியனுல கெங்கணு முலவி
கரியுரி போர்த்த கண்ணுத லருளால்
கவின்பல வான்குடி யென்னும்
புரியினிற் றோன்று நற்சிவ நேசன்
புகழுடன் வாழ்கபல் லாண்டே.

* * * *

வேலூர், மண்டி, திருவாளர் லோ. கு. நடராஜச் செட்டியா ரவர்கள்:—

சைவசித்தாந்த ஞான சாத்திரங்களை யாராயத் தீவிரமாக முயலும் எனது விருப்பத்துக்கு இடையூறாகப் பாபாத்மாக்களின் இயக்கம் பரவுதல் கண்டு கவலையுறும்போது சிவஞான போனக மாகிய திருவமுதளித்து என்னைத் தேற்றும் சிவநேசனை மன தாரப் போற்றுகின்றேன்.

* * * *

கரிவலம்வந்த நல்லூர், ஆனந்தகான சபையார்:—

சைவசமய வுண்மைகளையும், தமிழ்மொழி யாராய்ச்சிகளையும் சிறப்பாகக் கொண்டு, நல்ல காகிதத்தில் சுத்தமான எழுத்துக்க ளால் அச்சியற்றிப் புத்தகவடிவந்தாங்கி, ஸநாதன தருமத்தை நிலை நிறுத்தி வரும் சிவநேசன், தில்லைவாணர் திருவருளால் வெற்றி மிகுத்துப் பல்லாண்டுவாழப் பிரார்த்திக்கிறோம்.

———



49. கழுகுநடு வாரமிதை காணும்வெளி யில்லாக்
கழுகு தொழுகழுக் குன்றே—கழுவிற்
சமணரை யேற்றினர் தானவர்கள் பால்வஞ்
சமணரை யேற்றினர் சார்வு.

(கு - பு.) கழுகு என்னும் மூன்றெழுத்தும் முறையே இடையில் ஆர்கின்ற அம், இதை, வெளி இல்லாக் கழுகு; இம் மூன்றெழுத்தும் நடு வில் பொருந்திய அம் இதை வெளியென்பவை முறையே அகம், இழுதை, வெகுளி என்பனவாம். அகம் - பாவம். இழுதை - அறிவின்மை. வெகுளி - கோபம். கழுகு - கழுகு வடிவங்கொண்ட இரு முனிவர். சமணரைக் கழுவில் ஏற்றினர். தானவர்கள்பால் வஞ்சம் அண் ஏற்றினர்; வஞ்சத்தை அண்ணிய; நரை ஏற்றினர் - திருமாலாகிய வெள்ளிய இடபத்தை உடைய வர். தானவர்பால் வஞ்சம் அண்ணியதென்றது திருமால் மோகினியாக வந் து அமுதத்தை அசுரருக் கீயாமல் தேவர்களுக்கு மட்டும் கொடுத்த கப டச்செயலை. (௪௯)

50. ஆதியந்த மாகவிதி யார்பூ வணிவோர்கள்
காதலுட னேத்துங் கழுக்குன்றே—ஓதும்
இருக்கு மறியா னிடக்கரத்தெப் போழ்தும்
இருக்கு மறியா னிடம்.

(கு - பு.) வி, தி என்ற இரண்டெழுத்துக்களைத் தனக்கு முன்னும் பின்னும் முறையே பொருந்தப்பெற்ற பூ என்றது விபூதியை. விபூதி அணி வார்கள் காதலுடன் ஏத்தும் கழுக்குன்றே. இருக்கும் அறியான் - வேதத் தினாலும் அறியப்படாதவன். இடக் கரத்தில் எப்போதும் இருக்கின்ற மறியான்; மறி - மான்கன்று. (௫0)

## இருபொருட் சிலேடை.

51. உள்ளும் பரத்தையர்க ணுட்டுறவோர் மாரன்மலர்க்
கள்ளம் பொழியுங் கழுக்குன்றே—கொள்ளுமன்பின்
வாயிலா ருள்ள மணிக்கோவி லாக்கொண்ட
தாயிலா ருள்ள தலம்.

(கு - பு.) பரத்தையர்களுடைய கண், கள்ளத்தைப் பொழியும். உள் நுறவோர் மாரனது மலர்களாகிய தேனையுடைய அம்பை ஒழியும். வாயிலார் என்ற நாயனருடைய உள்ளத்தை. தாய் இல்லார். (௫௧)

### முப்பொருட் சிலேடை.

52. பூமருவு வண்டினங்கள் பூவையர்கண் கற்பகம்போற்
காமரம்பா டுற்ற கழுக்குன்றே— சேமமறி
ஆடுங்கா லத்தன் பணிவிடங் கொண்டவன்மால்
தேடுங்கா லத்தன் சிலம்பு.

(கு - பு.) வண்டினங்கள் காமரம் என்ற பண்ணைப் பாடுற்ற. பூவையருடைய கண் காமர் அம்பை ஆடுற்ற; ஆடுற்ற - வெற்றிகொண்ட. காவிலுள்ள மரம் கற்பக விருட்சம்போல் பாடுற்ற; பாடுற்ற - பெருமை வாய்ந்த. ஆடுங்காலத்து அன்பு அணவி சேம மறியை இடங்கொண்டவன்; அணவி - பொருந்தி; மறி - மான்கன்று. இடம் - இடக்கரத்தில். மால் தேடும் கால்களை உடைய அத்தன். (௫௨)

### இருபொருட் சிலேடை,

53. செவ்விமயில் கோபஞ் சிவார்ச்சனைசெ யில்லிலைந்து
கவ்வியங்கு லாவுங் கழுக்குன்றே—எவ்வ
மலவிடக்கை யானகல வந்தாள்வோ னோர்மான்
நிலவிடக்கை யான்வாழ் நிலை.

(கு - பு.) செவ்வி - அழகை உடைய. மயில் கோபம் கவ்வி அங்கு உலாவும்; கோபம் - இந்திர கோபப் பூச்சி. இல்லில் - வீடுகளில். ஐந்து கவ்வியம் - பஞ்சகவ்வியம். எவ்வ மலமாகிய விடக்கை; எவ்வம் - துன்பம். விடக்கு - ஊன்; இங்கே தேகம்; யான் விடக்கை அகல வந்து ஆள்வோன். மான் நிலவு இடம் கையான்; மால் நிலவு இடக்கையானெனப் பிரித்துத் திருமால் விளங்குகின்ற இடப் பக்கத்தை யுடையவரெனக் கொள்ளுதலுமாம்; கை - பக்கம். (௫௩)

54. தாவி லிளைஞர்மணஞ் சாருமிடந் தண்முகில்கள்
காவணமே லோங்குங் கழுக்குன்றே—பாவுரைத்து
நேசித்து வந்தார் நிறைபசிக்காக் கச்சூரில்
யாசித்து வந்தா ரிடம்.

(கு - பு.) தா இல் - வருத்த மில்லாத. இளைஞர் மணம் சாரும் இடத்தில் காவணம் மேல் ஓங்கும்; காவணம் - மணப் பந்தல். முகில்கள் காவை அண்ண மேல் ஓங்கும்; கா - சோலை. பாவை உரைத்து. நேசித்து வந்தார் - சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரமூர்த்தி நாயனாருடைய



பசியைத் தீர்க்கும்பொருட்டு யாசித்து உவந்தார்; யாசித்து - பிட்சை எடுத்து. கச்சூர் - திருக்கச்சூரென்ற தலம். (௫௪)

55. செங்கை மழுவோன் சிரமுங் குருகினமும்
கங்கை யகலாக் கழுக்குன்றே—இங்கினிமேல்
எம்மைப் படையான் இணையில்பூ தங்களெனும்
செம்மைப் படையான் சிலம்பு.

(கு - பு.) மழுவோன் - சிவபிரானுடைய. சிரம் கங்கா நதியை அகலாத. குருகு இனம் கங்கை அகலாத; குருகு - நாரை; கங்கு - வரம்பின் பக்கம். இனிமேல் எம்மை இங்குப் படையான்; படையான் - பிறப்பியான். பூதங்கள் என்னும் செம்மையாகிய படைகளை உடையவன்; படை - சேனை. (௫௫)

56. விஞ்சு கயலினங்கண் மேன்மை பெறுகுளத்துக்
கஞ்சங் குதிக்குங் கழுக்குன்றே—தஞ்சமென
மாவி னடிப்பான் மருவினன் அன்பருளப்
பூவி னடிப்பான் புரம்.

(கு - பு.) கயல் இனங்கள் கஞ்சத்தில் குதிக்கும்; கஞ்சம் - தாமரை. குளத்து - குளத்தில். கம் சங்கு உதிக்கும்; கம் - வெண்மையான. இத்தலத்திலுள்ள தீர்த்தங்களுள் ஒன்றாகிய சங்க தீர்த்தத்தில் ௧௨ - வருடத்திற்கு ஒருமுறை சங்கம் தோன்று மென்பது புராண வரலாறு; பிரத்தியட்சத்திலும் காணப்படுகின்றது. தஞ்சமென - தமக்குப் பற்றுக்கோடென்று அடியார் சொல்லும்வண்ணம். மாவின் அடிப்பால் மருவினன் - மாமரத்தின் அடியில் பொருந்தியிருந்தான்; மாவென்றது காஞ்சியிலுள்ள மாமரத்தை. அன்பர்களது உள்ளப்பூவில் நடிப்பான். (௫௬)

57. சேரும் பிதிர்கருமஞ் செய்பவருங் கான்மயிலும்
காரை விழையுங் கழுக்குன்றே—நேரெதிர்ந்த
வீரிடத்தா னத்தந்தி மெய்யுரித்தோன் சூழவரும்
பாரிடத்தா னத்தன் பதி.

(கு - பு.) பிதிர் கருமம் செய்பவர் காரையை விழையும்; காரை - ஒருவகைச்செடி; இது பிதிர் கருமங்களுக்கு உரியது. மயில் காரை விழையும்; காரை - மேகத்தை. தானம் தந்தி வீரிட - மதத்தைப் பொழியும் யானை வீரிடும்படி. அதன்மெய்யை உரித்தோன். பாரிடத்தான் - பூதகணங்களுக்குத் தலைவன். அத்தன் - தலைவன். (௫௭)

58. நல்லார் குடைதடத்து நாடு மருவியினும்
கல்லார மேவுங் கழுக்குன்றே—சொல்லூரும்
மாமகத்து வந்தான் மலியுமம்பர்த் தொண்டர்செயும்
நிமகத்து வந்தான் சிலம்பு.

(கு - பு.) குடை - நீராடுகின்ற. தடத்தில் கல்லாரம் மேவும் - தடாகத்தில் செங்கழுநீர் மலர்கள் பொருந்தும். அருவியில் கற்களும் ஆரமும் மேவும்; கல் - மாணிக்கம்; ஆரம் - முத்து. மா மகத்துவம் மலியும்; தான்: அசை. அம்பர்த் தொண்டர் - சோமாசி மாற நாயனார்; அம்பர் - திருவம்பரென்னும் தலம். மகத்து வந்தான்; மகம் - யாகம். (௫௮)

59. மாதர் மலர்விழியும் வாசிப்போர் தம்மனமும்
காதக மோடுங் கழுக்குன்றே—போதம்கும்
சேரமா னத்தன் சிலம்பினுலாப் பாடமகிழ்
வீரமா னத்தன் விருப்பு.

(கு - பு.) விழி காது அகம் ஓடும் - கண்கள் காதினிடம் ஓடுகின்ற. வாசிப்போர் தம் மனம்; காதகம் ஓடும் - பீடித்தலை நீங்குகின்ற. போதம் - அறிவு. சேரமான் - கழறிற்றறிவார் நாயனார். அ தன் சிலம்பில் - அழகிய தன் கைலாய வெற்பில். உலா - ஆதி உலாவை. வீரமான் அத்தன் - வீரமானைத் தாங்கிய திருக்கரத்தை உடையவன்; அர்க்கையின் தலைவனென்றலுமாம். (௫௯)

60. பொற்பின்மட வாருக்கும் பூதியணி வோருக்கும்
கற்பங் கழியாக் கழுக்குன்றே—அற்பொழுதில்
ஆடினு னந்தி யழலையா னுகமங்கள்
பாடினு னந்தி பதி.

(கு - பு.) மடவாருக்குக் கற்பு அங்கு அழியாத. பூதி - விபூதியை. கற்பம் - விபூதிவகையில் ஒன்று. அற்பொழுதில் - இராத்திரியில். அந்தியையும் அழலையும் அனையான். நந்தி - சிவபெருமான் திருநாமம்; "பேர் நந்தி யென்றேத்தும், அருவரைசூ ழையாறர்க்கு", "நந்தியை நங்கள் பிரான்றனை நானடி போற்றுவதே", "நந்தி நாம நமச்சி வாயவே" தேவாரம். (௬௦)

61. பஞ்சினடி யார்கவுளும் பாடு மறையோரும்
கஞ்சனையொப் பாகுங் கழுக்குன்றே—தஞ்சமென



ஏனாதி நாதர்தா மேத்த வருள்சுரந்த
வானாதி நாதர் மனை.

(கு - பு.) பஞ்சின் அடியாருடைய கவுள் கஞ்சனை ஒப்பாகும்; பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு; அடியார் - மகளிருடைய; கவுள் - கன்னங்கள்; கஞ்சனை - கண்ணாடி. மறையோர் கஞ்சனை ஒப்பாகும்; கஞ்சனை - பிரமனை. ஏனாதி நாதர் - ஏனாதிநாத நாயனார். வான் ஆதி நாதர் - ஆகாயத்திற் பிறந்த ஆதியாகிய நாத தத்துவமாக உள்ளவர்; ஆகாயமுதலிய பூதங்களுக்கு என்றலுமாம். (௬௧)

62. உட்டுறவோர் மாத ரொளிர்பூ ணகில்வினைவார்க்
கட்டங் கடக்கும் கழுக்குன்றே—இட்ட
மருவக் கரையான் வருமூவர் பாடும்
திருவக் கரையான் சிலம்பு.

(கு - பு.) உள் துறவோர் வினையினால் வந்த நீட்சியை உடைய கஷ்டங்களைக் கடக்கும். நகில்: வினை வார்க்கட்டை அங்கு அடக்கும் - தொழிலமைந்த கச்சினை அடக்கும்; வார் - கச்சு. இட்டம் மருவு - அன்புபொருந்திய. அக்கரையான் வரும் மூவர் - சிரத்தையோடு வந்த சம்பந்தர் முதலிய மூவர். திருவக்கரை - ஒரு தலம். (௬௨)

63. செந்திருவ னார்கரமுஞ் சேரு மதகரியும்
கந்துக மல்குங் கழுக்குன்றே—சந்திரன்சேர்
சென்னிய ரல்லார் திருமிடற்ற ரன்பர்களுக்
கன்னிய ரல்லா ரகம்.

(கு - பு.) கரம் கந்துகம் அல்கும் - கைகளில் பந்துகள் தங்கப்பெறும். மதகரி கந்து உக மல்கும்; கந்து - கட்டுத்தறி. சென்னியர் - தலையை உடையவர். அல் ஆர் திரு மிடற்றர்; அல் - இருள். அன்பர்களுக்கு அன்னியர் அல்லார். (௬௩)

64. விரும்பு மணிப்புற்று மேவுமணப் பந்தர்
கரும்பணிக ளோங்குங் கழுக்குன்றே—அரும்பும்
சிலம்பொலி காட்டினார் சேர்பிராற் குப்பேய்க்
குலம்பொலி காட்டினார் குன்று.

(கு - பு.) புற்றில் கரும் பணிகள் ஓங்கும்; பணிகள் - பாம்புகள். மணப்பந்தரில் கரும்பு அணிகள் ஓங்கும்; கரும்பு அணிகள் - கரும்புகளின்

அலங்காரங்கள்; அணிகள் - வரிசைகளுமாம். சேரர் பிராற்குச் சிலம்பு ஒலியைக் காட்டினர்; சேரர்பிரான் - சேரமான் பெருமாள் நாயனார். பேய்க்குலம் பொலிகின்ற காட்டினர்; காடு - மயானம். (௬௪)

65. தாரிலகு தோரணமுஞ் சைவருறை நன்மடமும்
காரண மல்குங் கழுக்குன்றே—பாரை
அருந்தேற்று வந்தான் அமரிளசை மாறன்
விருந்தேற்று வந்தான் விருப்பு.

(கு - பு.) தோரணம் காரை அண்ண மல்கும்; கார் - மேகம். மடம் காரணம் மல்கும்; காரணம் - ஓர் ஆகமம். இவ்வாகமம் இத்தலத்திற் குரியது. பாரை அருந்து ஏறு - பூமியை உண்ட இடபம்; என்றது திருமாலாகிய இடபத்தை. இளசை மாறன் - இளையான்குடி மாற நாயனருடைய. விருந்தை ஏற்று உவந்தான். (௬௫)

66. பொன்னனையார் பூணகிலும் பூக மலிவயலும்
கன்னலணி வீறுங் கழுக்குன்றே—என்னைக்
கருவிற் கிடத்தார் கருதியபொன் னோங்கற்
செருவிற் கிடத்தார் சிலம்பு.

(கு - பு.) நகில்களில்: கல் நல் அணி வீறும் - கற்கள்பதித்த நல்ல ஆபரணங்கள் மிக்கிருக்கும். பூகம் - பாக்கு மரங்கள். கன்னல் அணி - கரும்புகளின் வரிசை. கருவில் கிடத்தார் - பிறவியில் கிடத்ாதவர். பொன் ஓங்கல் செரு வில்லுக்கு இடத்தார் - மேருவாகிய வில்லுக்கு ஏற்ற இடப்பக்கத்தை உடையவர்; பொன்ஓங்கல் - மேருமலை; செரு - போர். (௬௬)

67. மித்தையகல் வீரர்கையும் வீட்டிறப்பி னிற்புறவும்
கத்தி யுலவுங் கழுக்குன்றே—அத்தி
உரித்தா னமல மொழித்தான் பணிப்பூண்
பரித்தா னமலன் பதி.

(கு - பு.) மித்தை - பொய். வீரர் கை கத்தி உலவும். இறப்பில் - வீட்டிறப்பில். புறவு கத்தி உலவும் - புறாக்கள் கத்திக்கொண்டு திரியும். அத்தி உரித்தான் - யானையை உரித்தவன். நம் அலத்தை ஒழித்தான்; அலம் - வருத்தத்தை. பணிப் பூண் - சர்ப்பாபரணத்தை. பரித்தான் - தாங்கினவன். (௬௭)



68. சேந்த னடியர்குழாஞ் சேர்குறிகள் வைத்திளைஞர்
காந்தம் படிக்குங் கழுக்குன்றே—ஏந்துகொன்றைத்
தேனமருங் கண்ணியார் தேவியொடு பார்த்தனெதிர்
கானமருங் கண்ணியார் காப்பு.

(கு - பு.) சேந்தன் - முருகக்கடவுளின். காந்தம் படிக்கும் - கந்தபுராணத்தைப் பாராயணம் செய்யும். குறிகள் - இலக்குக்களை. இளைஞர் இலக்கு வைத்துக் காந்து அம்பு அடிக்கும்; காந்து அம்பு - கொதிக்கின்ற பாணம். தேன் அமரும் கண்ணியார்; கண்ணி - தலையிற் சூடும் மாலை. பார்த்தன் - அருச்சுனன். கானம் மருங்கு அண்ணியார்; கானம் - காடு; அண்ணியார் - அணுகியவர். (௬௮)

69. நம்புகழைக் கூத்தர்களு நாடுமலை வாவியிலும்
கம்பத் திவருங் கழுக்குன்றே—வம்பு
விரவிமதிக் கண்ணன்பு மேவேனை யாண்ட
இரவிமதிக் கண்ண னிடம்.

(கு - பு.) கழைக்கூத்தர் கம்பத்து இவரும். வாவியில்: கம்பத்தி - அலைகளின் வரிசை; கம் : அலைக்கு ஆகுபெயர். வம்பு விரவி - தீச்செயலைக் கலந்து. மதிக்கண் அன்பு மேவேனை; மதிக்கண் - புத்தியினிடத்தே; இம திக்கு அண் அன்பு மேவேனை - யமதிக்கை அணுகுதற்கு உரியவனும் அன்பு மேவேனுமாகிய அடியேனை யென்றலுமாம்; யமதிக்கு இமதிக்கெனவும் வழங்கும்; "வெற்றிமதிக் கண்ணியான் வீயாம லாண்டவருள், வெற்றிமதிக் கண்ணியான் வீடு" (தலைசைச் சிலேடை வெண்பா, ௪.) இரவியும் மதியுமாகிய முகக் கண்களை உடையவன். (௬௯)

70. சேலோடு தண்புனலுஞ் செப்பொற் கழலுமன்னர்
காலோ டிவருங் கழுக்குன்றே—பாலமம்பிற்
கட்டிக் களித்தான்றன் கண்வளர்பா லாழிபுலிக்
குட்டிக் களித்தான்றன் குன்று.

(கு - பு.) சேல் ஓடு - சேல் மீன்கள் ஓடுகின்ற. புனல் காலில். ஓடி வரும்; கால் - வாய்க்காலில். கழல் மன்னர் காலோடு இவரும்; கழல் - வீரக்கழல். அம்பில் பாலம் கட்டிக் களித்தான் தன்; அம்பு - கடல்; பாலமென்றது அணையை; களித்தான் - இராமன். புலிக்குட்டிக்குப் பால் ஆழி அளித்தான் - உபமன்யு முனிவருக்குப் பாற்கடலை உண்ணக் கொடுத்தவர்; புலி - வியாக்கிரபாதர். (௭௦)

71. செம்பவள வாய்க்கிளியுஞ் செந்தா மரைக்கயமும்
கம்பு ளிருக்குங் கழுக்குன்றே—வெம்பிமனம்
யானைந்து மாடில் யமபுரிநண் ணாதாள்வோன்
ஆனைந்து மாடி யகம்.

(கு - பு.) கிளி கம்புள் இருக்கும்; கம்புள் - கம்பங்கொல்லையுள். கயம் கம்புள் இருச்கும் - குளத்தில் சம்பங்கோழி இருக்கும். கம்பு உள் இருக்கும் என்றலுமாம்; கம்பு - சங்கு. யான் வெம்பி மனம் நைந்து. மாடு இல் யமபுரி நண்ணாமல்; மாடு - செல்வம், பெருமை, பொன். யமபுரி - நகரம். ஆன் ஐந்தும் ஆடி; ஆன் ஐந்து - பஞ்ச கவ்வியம். (எக)

72. ஒப்பின்மன்னர் தங்கரமு மோதுமவர் வீடுமிலங்
கப்பண மன்னுங் கழுக்குன்றே—கப்பகலாச்
சூலத்த னத்தன் றொழற்கரியான் றீக்கணொளிர்
பாலத்த னத்தன் பதி.

(கு - பு.)மன்னர் தம் கரம் கப்பணம் மன்னும்; கப்பணம் - ஓர் ஆயுதம். வீடு இலங்கப் பணம் மன்னும்; பணம் - திரவியம். இலங்கப் பண்ண வீடுகள் மன்னும் என்றலுமாம்; இலங்கப்பண்ண - விளங்கும்படி அலங்கரிக்க. கப்பு அகலாத சூலத்தன்; கப்பு - கவர்ப்பு. நத்தன் - திரு மால்; தொழற்கு அரியான். தீக்கண் ஒளிர் பாலத்தன்; பாலத்தன் - நெற்றியை உடையவன். (எஉ)

73. செச்சை முலையார் செறிகரங் கைக்கரிகள்
கைச்சரி துன்னுங் கழுக்குன்றே—மெச்சவரு
சித்திர மானன் றிகழ்கீழ் முகத்தொடறு
வத்திர மானன் மனை.

(கு - பு.) செச்சை - செஞ்சாந்தின் குழம்பு. கரம் கைச்சரி மன்னும் - கைகள் ஒருவகை வளையல்களைப் பொருந்தும். கைக்கரி - யானைகள். கைச்சு அரி துன்னும் - வெறுத்துச் சிங்கங்களைப் போர்செய்தற்கு அடையும். சித்திரம் மானன் - அழகியமானை ஏந்தியவன். கீழ்முகத்தோடு அறு வத்திர மானன் - கீழ்நோக்கிய அதோமுகத்துடனே இயல்பாயுள்ள ஐந்து முகமும் சேர ஆறுமுகங்களை உடையவன் ஆனன்; வத்திரம் - முகம் (கந்த. திருவவதார. 43—4.) "ஐந்து முகத்தோ டதோமுகமாய்" கந்தர் கலி. 76. (எங)

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# இருபா விருபஃது.

## (பதவுரை)

1. கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டா னென்றொருகான் மேவுவரான் வேறின்மை
கைகண்டா ருள்ளத்தின் கண்.

வெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரிலே
மெய்கண்டான்—(ஜகதாசாரியராக வந்த) ஸ்ரீமெய்கண்டதேவர்
நுதற்கண்ணும்—(தமது)நெற்றியிலுள்ள கண்ணையும்
கண்டக்கறையும்—கழுத்திலுள்ள(ஆலகாலவிடக்)கறுப்பையும்
கரந்தருளி—மறைத்து
மண்ணிடையின்—உலகத்திலுள்ள
மாக்கள்—ஆன்மாக்களின்
மலம்அகற்றும் என்று—அஞ்ஞானத்தை நீக்கியருளுவாரென்று
ஒருகால்—ஒருதரமாயினும் (மக்கள்)
மேவுவர்—சிந்திப்பார்கள்.

(ஆதலால் அவர்கள்)

உள்ளத்தின்கண்—(தமது)அறிவிலே
வேறு இன்மை—(அப்பெருமானார்) பிரியாது விளங்குவதை
கைகண்டார்—புலப்படக்காண்பார்கள்.

சிவபிரானே ஆசாரியத் திருமேனி தாங்கிவந்து ஆன்மாக்களுக் கநுக்கிரகிக்கின்றா னென்பது சைவசித்தாந்த வுண்மை. ஆகலின் ஈண்டுக் கூறிய ஆசாரிய வணக்கஞ் சிவவணக்கமே யாயிற்று.

---

2. கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் றனென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரா கிருகக் கலியாழ் வேனைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானா துடையே னெனதுள

186930

நீங்கா நிலைமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிரிவின் மையெனி
னொராலினை யுணர்த்தும் விராய்நின் றனையேற்
றிப்பிய மந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்றா மெனக்கெம் பெரும
விருநிலந் தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறோ வுடனோ விளம்பல் வேண்டும்
சீறி யருளல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறின னபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினங் குருமுத லாயெனி
னபக்குவ மருளினு மறியேன் மிகத்தகு
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்னாற்
பக்குவ மதனாற் பயனீ வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்னோ
தன்னொப் பாரிலி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையினீ
நின்மலன் பருவ நிகழ்த்திய தியார்க்கோ
வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெனினே
யிணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
காண்பா ரியார்கொல் காட்டாக் காலெனு
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தி
னாட்பா லவர்க்கரு ளென்பதை யறியே.

கண் அகல் ஞாலத்து—இடமகன்ற வுலகத்தில்
கதிரவன்—(இருளை நீக்குஞ்) சூரியன்(போன்று)
தான் என—(உயிர்களின் அஞ்ஞானத்தை நீக்குபவர்) இவரே யென்று (உலகர் துதிக்குமாறு)
வெண்ணைத் தோன்றிய—திருவெண்ணெய் நல்லூரி லவதரித்த



மெய்கண்ட தேவ—மெய்கண்டதேவரே!
காராகிருகக்கலி—(பிறப்பு இறப்பென்னுஞ்) சிறைத்துன்பத்தில்
ஆழ்வேனை—அகப்பட்டுக்கிடந்த என்னை (யெடுத்து)
நின்—உமது
பேரா இன்பத்து—அழியாத பேரின்பத்தில்
இருத்தியபெரும—வைத்தாண்ட பெருமானே!
எம்பெரும—உயிர்களுக்கெல்லாந் தலைவரே!
வினவல்—(நான் சில சந்தேகங்கள்தீர) வினவுதலை
ஆனாது உடையேன்—அமையாமல் எப்போதும்உடையவனா யிருக்கிறேன்.

சிறுமை உடைத்தால்—(என்னறிவு) சிறுமையை யுடைத்தாகலான்
அறியாது—(அவைகளுக்கு விடை) தெரியமாட்டாமல்
கூறினன்—(உம்மிடங்) கேட்பேன்:
சீறியருளல்—(நீர் என்னைக்) கோபியாதிருப்பீராக.
எனது உளம்—(நீர்) எனது உயிரினின்றும்
ஊங்கும்—அநாதி தொட்டே
நீங்காநிலைமை—பிரியாத நிலைமையில்
உளை—இருக்கின்றீர்.

(அப்படி யிருந்தும் எனக்கு)

அறிவு இன்மை—அஞ்ஞானம் (உண்டாவதற்கு)
மலம்—ஆணவம்
பிரிவு இன்மை—(என்னைவிட்டு) நீங்காமையே
எனின்—(காரணம்) என்பீராயின்,

(அஃது)

ஒராலினை—(நீர் என்னைவிட்டுப்)பிரிந்திருக்கின்றீர்(என்பதையே)
உணர்த்தும்—காட்டும்.

(அல்லது)

விராய் நின்றனையேல்—(நீரும் ஆணவத்தோடு) கூடி(என்னிடத்தில்) இருப்பீராயின்
திப்பியம்—(உமது) தெய்வத் தன்மை
அந்தோ—அம்மம்ம! சந்தேகத்துக்கிடமானதே.

(ஏனெனில் நீர்)

பொய்ப்பகை ஆகாய்—ஆணவத்தை நீக்கும் விரோதியாக மாட்டீர் (என்க).

(அன்றியும் உமக்கு)

சுத்தன்—தூயவன்,
அமலன்—மலமில்லாதவன்,

சோதிநாயகன்—ஞானத்தலைவன்,
முத்தன்—ஆனந்தமயன்,
பரம்பரன்—மிகவுமேலானவன்
எனும்பெயர்—என்ற திவ்வியநாமங்களும்
முடியா—பொருந்தா.

(இனி நீர்)

வேறு நின்று உணர்த்தின்— (என்னைவிட்டு) விலகியிருந்து [(எனக்கு) உணர்த்துவீராயின்
வியாபகம் இன்றாய்—(உமக்குச்) சர்வ வியாபகமு மில்லையாகி
எனக்குப் பேறும் இன்றாம்—எனக்கு முத்தியுமில்லையாகும்.

(தவிர)

பெருமாற்கு—உமக்கு
இரு நிலம் தீ நீர் இயமானன் கால் எனும்—ஐம்பெரும் பூதங்களெனப்படும்
பெருநிலத்தாண்டவம்—அண்டங்களை யியக்கும் (பஞ்சகிருத்திய மாகிய) திருக்கூத்தும்
இல்—இல்லையாகும்.
ஆதலின்—ஆகையால்
வேறோ—(நீர் என்னைவிட்டு) விலகி யிருக்கின்றீரா? (அல்லது)
உடனோ—(என்னோடு) கலந்திருக்கின்றீரா? (என்பதை)
விளம்பல் வேண்டும்—(எனக்குச்) சொல்லியருளல்வேண்டும்.

(இனி, நீர் ஞானத்தை)

குருமுதல் ஆய்—எனக்காசாரியராய் வெளிப்பட்டு
அபக்குவ பக்குவக்குறி—(எனது) அபக்குவ பக்குவத் தன்மைகளை
பார்த்து—ஆராய்ந்து பார்த்து
அருளினம் எனின்—உணர்த்தினோ மென்பீராயின்
அபக்குவம்—(எனது) அபக்குவத்தில்
அருளினும்—(நீர் எப்படி) உணர்த்தினும்
அறியேன்—(நான்) உணரமாட்டேன்.

(நீர் உணர்த்தியதை யுணர எனக்கு)

மிகத் தகு பக்குவம்—மேலான பக்குவம்
வேண்டில்—வேண்டுமானால்
நின்னால் பயன் இலை—நீர் உணர்த்துவதால் (எனக்கு) ஒரு பயனு [மில்லை.

(ஆனால்)

பக்குவமதனால் பயன்—(எனது) பக்குவத்தின் பயனாவது



வரின்—நீர் (ஆசாரியமூர்த்தியாய்) வெளிப்படுவதேயாம் (என் [பீராயின்)
பருவம்—பக்குவம் (சடமாகலின் வினைமுதலாக நின்று)
நின்னை—உம்மை
நிகழ்த்தாது—வெளிப்படுத்தாது.

(அன்றியும்)

அன்னோ—ஐயோ!
தன் ஒப்பார் இலி என்பதும்—நீர் நிகரில்லாதவரென்று (ஆகமங் [கள்) சொல்லுவதும்
தகுமே—பொருந்துமா?

(நிற்க)

மும்மலம்—மூன்று மலங்களும்
சடம்—சடப்பொருள்கள்.
அணு—உயிர்கள்
மூப்பு இளமை இல்—வளர்தல் தேய்தல்களை யில்லாதவைகள்.
நீ—நீர்
நின்மலன்—மலமில்லாதவர்.

(அங்ஙனமாக)

யார்க்கு—யாருக்கு
பருவம்—பக்குவம் (வேண்டுமென்று)
நிகழ்த்தியது— (நீர்) சொன்னீர்?
உணர்வு எழு நீக்கத்தை— (எனது) அறிவு விளக்கத்துக்கு வேண் டப்படும் (மல) நீக்கத்தையே
ஓதியது எனின்—(பக்குவமென்று) சொல்லுவீராயின்
இணை இலி ஆயினை என்பதை—(நீர்) நிகரில்லாதவரென்னு முண் [மையை
அறியேன்— (நான்) சம்மதியேன்.

(ஏனெனில்)

யானே நீக்கினும்—நானே (மலத்தை) நீக்கிக்கொள்ளுவதாயினும்
தானே நீங்கினும்—மலமே (என்னை விட்டு) நீங்கிக்கொள்ளு [தாயினு
கோனே—அரசே! நீர்
வேண்டா—வேண்டியதில்லை (என்க).

(ஆகையா லதனையும்)

கூறல் வேண்டும்—விளக்குவீராக.

(நிற்க)

காட்டாக்கால்—(ஆசாரியன்) உணர்த்தாவிட்டால்
யார் காண்பார்—(ஞானத்தை) யாரறியப் போகின்றார்?

எனும் மாண்பு உரை—என்னும் (ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளது) [உண்மை யுரையை

உணர்ந்திலை—(நீர்) அறியாமலா இருக்கின்றீர்?

(இல்லையாகலின்)

பாண்டியன்—பாண்டிய ராசா

மன்ற—தெளிவாக

கேட்ப—அறியுமாறு

கிளக்கும்—(ஸ்ரீமத் சம்பந்தமூர்த்திசுவாமிகள்) உபதேசித்தருளிய

மெய் ஞானத்தின்—உண்மை ஞானத்தின் (பெட்டகமாகிய)

ஆட்பாலவர்க்கருள் என்பதை—'ஆட்பாலவர்க்கருள்' என்னுந்

அறி—(எனக்கு) விளக்கியருளுக. [திருப்பாசுரத்தையும்

ஈற்றடியில் அறிவி யென்னும் பிறவினைச்சொல் விவ்விகுதி தொக்கு அறியென நின்றது.

ஆசாரியனை நோக்கி மாணக்கன் நிகழ்த்தும் வினக்களின் தொகுதி யே யிந்நூல். செய்யுள்தோறும் ஆசாரியனைச் சிவமாகவும், மாணக்கனை ஆன்மாவாகவுங் கொள்க.

சிவபிரானும் ஆணவமும் பகைப் பொருள்கள். ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுப்பவன் சிவபிரான்; அஞ்ஞானத்தைக் கொடுப்பது ஆணவம். ஆனல், ஆன்மாக்களிடங் காணப்படுவ தஞ்ஞானமே. ஆகை யால், ஆணவமே யவைகளிற் பிரிப்பின்றி நிற்றல் கூடும். ஞானமென்பது ஆன்மாக்களிட மில்லை. ஆகையா லதனைக் கொடுக்குஞ் சிவபிரானும் ஆண்டில்லை யாதல் வேண்டும். அங்ஙனமின்றி அவன் ஆணவத்தோடுகூடி ஆன்மாக்களில் நிற்பானயின் ஆணவத்தைப் போக்கும் வலி அவனுக் கில்லையாகும். சுத்தன்,அமலன் முதலிய பெயர்களையும் அவன் இழக்க நேரும். இனி, அவன் ஆன்மாக்களை விட்டு விலகி நிற்பானயின், அவைகளெல்லாம் அவனில்லாத இடமெனப்பட்டு அவனது சர்வ வியாபகம் பழுதுபடும். படவே, அவனுக்குப் பஞ்சகிருத்தியமும், அவைகளுக்கு வீடுபேறுங் கிடையா. பின்னை அவன் நிற்பதுதா னெப்படி?

சிவபிரான் ஞானத்தை யெப்படிப் புகட்டினும் பக்குவமில்லாத ஆன்மாக்கள் அதனைக் கிரகியா. பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கோ உபதேசம் மிகை. அவைக ளஃதின்றியே யுணரும். அங்ஙனமாயின் பக்குவம் போதுமே? அவனு முணர்த்துவ தேன்?

சடமாகிய பக்குவம் சித்தாகிய சிவபிரானைத் தருமா? தருமாயின், பக்குவத்துக் கியக்குஞ் சத்தியும், சிவபிரானுக் கியங்குஞ் சத்தியு முள வெனப்பட்டு அவன் தன் தலைமையை யிழப்பா னல்லவா?



மம், மாயை யென்னு மும்மலங்களுஞ் சடம். அவைக ளெப்படிப் பக்குவப்படினுந் தமது சடத்தன்மையில் மாறுவ தில்லை. ஆகவே, அவைகள் ஞானத்தை யறியா. ஆன்மாக்களுக்குச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யொன்றே யுண்டு. தம்மளவில் அவைகளுக் கெவ்வித மாறுதலு மில்லை. மாறுதலில்லாப் பொருளைப் பக்குவம் ஒன்றுஞ் செய்யாது. சிவபிரான் என்றும் ஒரே படித்தாய முழுஞான முள்ளவன். பக்குவம் அவனது ஞானத்தை யதிகப்படுத்தாது. ஆகவே, ஞானோபதேசத் திற் கேற்ற பக்குவம் இம் மூவரில் யாருக்கு வேண்டும்?

ஞானோபதேசமே ஆணவத்தை நீக்கும். அதற்குமுன் ஆன்மாவுக்கு அந் நீக்க மில்லை. இருக்குமாயின், ஆணவந் தானகவே நீங்குதல் வேண்டும். அல்லது, ஆன்மா தானகவே அதனை நீக்குதல் வேண்டும். இவ் விரண்டிலொன்றிருப்பினும், சிவபிரான் வேண்டியதில்லை. மேலும், மலத் தை நீக்கிக்கொள்ளுஞ் சத்தி ஆன்மாவுக்கும் உளதெனப்பட்டு அவனது நிகரின்மை கெடும். ஆகவே, ஞானோபதேசத்துக்குமுன் ஆணவநீக்கம் உள தெனக்கொண்டு அதனையே பக்குவ மென்னலாமா.?

ஆனல், ஞானோபதேசத்துக்கு ஆசாரியனது இன்றியமையாமையை ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளும், பக்குவத்தின் இன்றியமையாமையை ஸ்ரீமத் சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் உடன்படுகின்றார்கள். அவற்றினுண்மை யெப்படி?

---

3. அறிவறி யாமை யிரண்டு மடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே—யறிவோ
வறியேனே யாதென்று கூறுகே னாய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு.

மெய்கண்டதேவே—மெய்கண்டதேவரே!

அடியேன்—நான்

அறிவு—அறிதல்

அறியாமை—அறியாதிருத்தல் (என்னும்)

இரண்டும்—இரண்டுதன்மைகளையும்

செறிதலால்—பொருந்தியிருப்பதால்

அறிவோ—அறிவுப்பொரு ளாவேனோ? (அல்லது)

அறியேனோ—அறிவில்பொரு ளாவேனோ?

யாது என்று—இன்னவகையான பொருளாவே னென்று

கூறுகேன்—(எனக்குத்தெரியாமையால்) நான் எப்படித் தீர்மா [னிப்பேன்?

(ஆகையால் நீரே)

ஆய்ந்து—(என்விருப்பத்தின் மிகுதியைக்) கண்டு
குறி—(உமது) விடையில்
மாறு கொள்ளாமல்—(நான் மேலுஞ்) சந்தேக மடையாமல்
கூறு—(மிக விளக்கமாகச்) சொல்லியருளுக.

ஆன்மாக்களிடம் ஞானமும் அஞ்ஞானமுங் கலந்து காணப்படுதால், அவை ஞானப்பொருளா? அஞ்ஞானப்பொருளா?

---

4. கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கொலையஞர் மதநகை
விராயெண் குணனுமா ணவமென விளம்பினை
யஞ்ஞா னம்பொய் யயர்வே மோகம்
பைசா சூந்நிய மாற்சரி யம்பய
மாயவேழ் குணனு மாயைக் கருளினை
யிருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
வறுவகைக் குணனுங் கருமத் தருளினை
யாங்கவை தானு நீங்காது நின்று
தம்வழிச் செலுத்தித் தாமே தான
வென்வழி யென்பதொன் றின்று மன்ன
ஆரும் பெயரு முருவுங் கொண்டென்
னூரும் பெயரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலன் விடம்படு
மூன்றிரள் போன்ற தாயிற் றோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் றுகு மென்னைவந் தணைதரத்
தானே மாட்டா தியானே செய்கில

# செய்தித் திரட்டு.

**தமிழன்பர் மகாநாடு:**— சென்னை புத்தகாலய பிரசார சங்கத்திலிருந்து தமிழன்பர் மகாநாடு அறிக்கை வரப்பெற்றோம். இச் சங்கமானது மகா-௱-௱-ஸ்ரீ K. V. கிருஷ்ணசாமி ஐயரவர்களைத் தலைவராகவும், இன்னும் பல பிரபல கனவான்களைத் துணைத்தலைவர், பொக்கிஷதார், காரியதரிசிகள், அங்கத்தினர்களாகவும் கொண்டுளது. இதன் நோக்கம் தென்னாட்டு மொழிகளிலேயுள்ள இலக்கியங்கள் வளம்பெற்று, பொதுமக்களிடையே கல்வியறிவு பரவச்செய்ய வித்தியாபிவிருத்தி செய்வோர் பலரையும் சேர்த்து தமிழன்பர் மகாநாடு கூட்டவேண்டுமென்பது. இம் மகாநாட்டில் தமிழ்மொழி விஷயங்கள் மாத்திரம் கவனிக்கப்பெறும் எனவும், தமிழ்மொழிமூலமாகக் கல்விகற்பிக்க வேண்டுமென்னுங் கருத்துள்ள யாவரும் சேர்ந்துகொள்ளலாமென்றும் தீர்மானிக்கப்பெற்றுள்ளது. பொதுஜன புத்தகாலய மசோதா வொன்றை சட்டசபையில் கொண்டுவந்து, சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரவும், மசோதா தயாரித்துச் சட்டசபை நுழைவுக்கு அநுமதி பெற்றிருக்கிறது. நம் நாட்டு மக்கள் நலம் பெறுதற்கு இத்தகைய மகாநாடு கூட்ட வேண்டுமென்று கருதும் அன்பர் பலரும் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்து மகாநாட்டிற் கலந்து உழைக்கவும் வேண்டுகிறது. பலரிடமிருந்தும் அநுகூலமான செய்தி தெரிந்து இச் சங்கத்தின் நிர்வாக சபையானது கூடிய சீக்கிரத்தில் சென்னையிலே ஒரு மகாநாட்டைக் கூட்டுவிக்கும் எனவும் தெரிவிக்கிறது.

**குறிப்பு:**— புத்தகாலய பிரசார சங்கமும், பொதுஜன புத்தகாலயமும், தமிழன்பர் மகாநாடும் இன்றியமையாதவைகளே. அவைகள் வளர்ச்சிக்குத் தமிழ்க் கல்வி அபிவிருத்தியே ஆதாரமாகும். தமிழ்க் கல்வி வளர்தற்குத் தமிழ்நாட்டுப் பொதுஸ்தாபனங்கள், நீதிமன்றங்கள் ஆதிய ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் தமிழ்மொழிவழக்கில் நடைபெறச் செய்தலே சிறந்த சாதனமாகும். அங்ஙனமின்றி வளர்ப்பதென்றால், வடமொழியானது மந்திரவழக்கில் வளர்வதுபோல, வாயளவிற்றான் வளரும். செயலளவில் உலக வழக்கில் வீறி விளங்க வேண்டுமானால் அரசாங்க நிலையங்களாதியவைகளிலெல்லாம் பிரதானமாகக் கொண்டாற்றான் காரியமுண்டு. இவ்வாறு சித்திபெறுவோமானால், சகல சாம்ராஜ்யங்களும் பெற்றவர்களாவோம். [ப—ர்]

**மலாயா நகரத்தார் வர்த்தகவிலாசம்:**— இப் பெயருடன் சுமார் ஆயிரம் பக்கம் கொண்ட ஒரு புத்தகத்தை வெளியிட சமூகாபிமானியாகிய திருவாளர் பெ. நா. மு. முத்துப்பழனியப்ப செட்டியாரவர்கள் முன்வந்துள்ளார்கள். புத்தகம் ஒன்றுக்கு விலை பத்து வெள்ளியாகும். மூன்று வெள்ளி முன்பணத்துடன் இவ்வாண்டு ஆடிமாதத்திற்குள் ஐஞ்ஞூற்றுவர் அநுமதிக்க முன்வந்தால் காரியம் தொடங்கி நிறைவேற்றவும், இன்றேல் அநுமதித்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவும் கூடுமெனத் தெரிவித்துள்ளார்கள். அப் புத்தகத்தில் நகரத்தார்களின் வரலாற்றுரை—வர்த்தகத்துறையாதிய பல நலன்களும் வெளிவருமென்பது விக்ஞாபனப் புத்தகத்தினால் விளங்குகிறது. சமூக அன்பர்கள் பேரார்வத்துடன் அநுமதித்திருப்பார்களெனவும், காரியந் தொடங்கி யினிது நிறைவேறப்பெறுமெனவும் நம்பிக்கையுடன் திருவருளைப் போற்றுகின்றோம்.

**பிள்ளையார்பட்டி:**— விநாயக சதுர்த்தித் திருவிழாவுக்குக் காப்புக்கட்டி ஒவ்வொருநாளும் சிறப்பாக நடைபெறுகிறது. அவ தேர்த் திருவிழாவும், கூ தீர்த்தவாரியும், சப்தாவரணமும், விரத உத்யாபனமும் நன்கு நடைபெறும்.

**பெருஞ்சொற்கொண்டல்:**— புரிசை திருவாளர் சு. முருகேச முதலியார், முத்தமிழ் ரத்னாகரம் பானுகவி அவர்களின் மாணாக்கருள் ஒருவர். பலவான்குடி மணிவாசக சங்கத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவதுடன், பிள்ளையார்கூடத்திலும் இம்மதி கஎ வெள்ளிக்கிழமை மாலை ஓர் பெருஞ் சொற்பொழிவாற்றுவர்.

**இராமாயண பட்டாபிஷேகம்:**— கோட்டையூர் க. பெ. சத்திரத் தாருணி அக்கிரகாரத்தில் கானப்பேட்டை பிரமஸ்ரீ மீனாக்ஷிசுந்தர தீக்ஷிதரால் வான்மீகிராமாயணப் பிரசங்கம் ஆறேழு மாதகாலமாக நடைபெற்று, இம்மதி கூ பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாயிற்று. மகாஜனங்களாலும் நகரத்தார்களாலும் சம்பாவனையும் சமாராதனையும் செய்யப்பெற்றன.

**ஆடிப்பூரத்திருவிழா:**—திருச்செங்கோட்டில் சுகந்தகுந்தளாம்பிகைக்கும் கோவிலூரில் திருநெல்லையம்பிகைக்கும், காரைக்குடியில் மீனாட்சியம்மையார்க்கும் சிறப்பாக நிறைவேறியது. காரைக்குடியில் நடைபெற்ற திருவிழாச்சிறப்பை, மணிவாசக ஞானசம்பந்த சபைக் காரியதரிசி திரு. பா. சிதம்பரநாத பிள்ளை யவர்கள் அகற்பாவால் வர்ணித்துள்ளார்கள்.

**சிவத்திற் கலந்தனர்:**—கள்ளக்குறிச்சி தாலுகா, குடியநல்லூர் மெய்ப்பொருணயனார் மடத்தின் ஸ்தாபகரும் தலைவருமான திருச்சிற்றம்பலப் பெயரிய சுவாமிகள், ஆடி உகூ சோமவாரத்தன்று திருவடிசேர்ந்தனர். இம்மதி கஉ பத்தாங்கிரியையும், சிவலிங்கப் பிரதிட்டையும் செய்யப்பெற்றன என திரு. நடேச உடையார் தெரிவிக்கிறார்.

**திருச்செங்கோடு:**—ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகைக்கு ஆடிப்பூர மகோற்சவம் பக்திவிமரிசையுடன் கொண்டாடப்பெற்றது. ஆடி கஙஉ சுவாதிநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு திருமஞ்சன திருவாராதனைகளுடன் குருபூசையும், ஆதிசைவ பிராமண சந்தர்ப்பணையும், மாகேசுவரபூசையும் புராணபடனமும், வெள்ளி மண்டபத்தில் திருவுலாவும் சிறப்பாகச் செய்யப்பெற்றன என்று திரு. மு. சு. தெ. ராஜாமணி சிவம் தெரிவிக்கிறார்.

**அனந்தபுரம்:**— ஆரணி, சைதாப்பேட்டைச் சேரி என்கிற இவ்வூரில் மகாபாரத மகோற்சவம், திரௌபதாம்பிகை யாலயத்தில், ஆடி கக உ தொடங்கி ஆவணி கஉ வரை நடைபெறுகிறது. ஒவ்வொருநாளும் மாலை 2மணிமுதல் 6மணிவரை முத்தமிழ் ரத்னாகரம் ம. இ. பானுகவியவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய புரிசை திரு. சு. முருகேச முதலியார் அவர்களால், மகாபாரத பிரசங்கமும், கடைசி எட்டு நாட்கள் இரவில் தக்க நடிகர்களால் நாடகமும், கடைசிநாள் தழல் விளையாடலும் அன்பர்கள் கண்டும் கேட்டும் களிப்புறலாம்.



**திருக்கரவீரம்:**—இது, திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் தேவாரத் திருப்பதிகத்தாலும், திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகங்களாலும் சிறப்புக் கூறப்பெற்று, திருவாரூரிலிருந்து கும்பகோணம் ரோட்டில் 5மைல் தூரத்தில் உள்ள திருத்தலமாகும். இத்திருத்தல சிவாலயம் பேட்டிவயல் நிறைமங்கலம் ஜமீந்தார் தேவகோட்டை திருவாளர் ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியாரவர்களால் புதுக்கித் திருப்பணி செய்யப்பெற்று, ஸ்ரீ பிரத்தியக்ஷ மின்னும்பிகா சமேத ஸ்ரீ கரவீரநாத சுவாமிக்கும், மூத்தபிள்ளையார் முருகவேளாதிய மூர்த்திகட்கும், இம்மதி கஎ உத்தராடநாள் உதயாதி கஎ இ க்குமேல் கூவ நாழிகையளவில் தநுலக்ன நன்முகூர்த்தத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிடேகமும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் திருவருட்டுணை கொண்டு நடத்தப்பெறுவதால், சிவநேசச் செல்வர்கள் தெரிசித்து இன்புறுவார்களாக!

**கோர்ட்டுபீஸ்:**—புதிதா யுயர்த்தப்பட்ட கட்டணத்தைக் குறைத்து பழய நிலைமையில் அமைக்க வேண்டுமென 4—8—1933 ல் சிவகங்கை வக்கீல் சங்கத்தார் ஒருதீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றனர். மற்ற எல்லாச் சங்கங்களும் இக்கிளர்ச்சியைச் செய்து முறையிட்டால், காலநிலையறிந்து கவர்மெண்டார் இணக்கம் காட்டலாம்.

**கேதாரேசுர விரதம்:**— இதை உமாதேவியார் இருபத்தோராயிர வருடம் நோற்று பரமன் உடலிற் பங்கு பெற்றனள் என உபதேசகாண்டம், திருச்செங்கோட்டுப் புராணம் இவைகளிற் கூறப்பெற்றுள்ளது. கேதாரேசுரமென்னும் திருத்தலத்தில் நோற்கப்பெற்றமையால்,இவ்விரதத்திற்கு இப்பெய ரெய்தியது. இவ் விரத மகிமாதிசயங்களும் பலனும் சிந்தியாகமத்திலும், விரதநோற்கும் முறையும் உத்தியாபனவிதியும் சூட்சுமாகமத்திலும் கூறப்பெற்றுள்ளன. விரதகாலம், புரட்டாதி மாதக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியாம். சுக்கிலபக்ஷ அஷ்டமியிலிருந்து இருபத்தொரு நாட்களாகவும், கிருஷ்ணபக்ஷப் பிரதமையிலிருந்து பதினான்கு நாட்களாகவும், அஷ்டமியிலிருந்து எழு நாட்களாகவும் கொள்வதுண்டு. இயலாதார் அன்றைய ஒருநாளாவது விரத மிருக்கவேண்டும். இதன் விதிக்கிரமங்களைத் திருச்செங்கோடு சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள் விரிவாக எழுதியுள்ளார்கள். விரிவஞ்சி முற்றும் வெளியிடப்பெறவில்லை. ஆயினும், விரதிகள் ஆகம புராணங்களின்மூலம் கண்டு தெளிவார்களாக.

**திருக்கருவையம்பதி:**— இஃது, ஒப்பனையம்மையார்சமேத பால்வண்ணநாதர் திருக்கோயில்கொண்டுறையும் திருத்தலமாகும். இதில், எழுந்தருளியிருக்கும் ஆனந்தத் தாண்டவ மூர்த்தத்தைப்பற்றிய பிரதாபங்கள் மிக்க மகிமையுடையவாகும். மேலும், இத் தல விசேடங்களெல்லாம் திருக்கருவைப் பிரபந்தத் திரட்டில் கண்டு தெளியற்பாலது.

186930

**மதுரை:**— வர்ணாசிரமதர்ம சுயராஜ்ய சங்கத்தின் பொதுக்கூட்டம் இம்மதி சஉ காலைமுதல் நடைபெற்றது. வர்ணாசிரம தர்மம் வளர்ந்தோங்குதற்குரிய முறைகளைப்பற்றிப் பேசித் தீர்மானங்கள் செய்யப்பெற்றன.

186930

**காரைக்குடி:**—ச. நா. ச. சு. விலாசத்துடன் நடந்துவந்த உண்டியல் கடையை நிறுத்தி, ஆவணி கஉ முதல் 'இண்டோ கமர்ஷியல்பாங்க்' ஆரம்பித்து நடத்துவதாக, ஷை பாங்கர்கள் அறிவிக்கிறார்கள்.

**குமரன்:**—பத்தாவது ஆண்டுவிழா, ஆடி உகூ ஞாயிற்றுக்கிழமை மாலை 4—30 மணிக்கு கனம் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆடிமாதாந்தத்தில் அட்டமி கார்த்திகையுடன் கூடிய ஞாயிற்றுக்கிழமை இராகுகாலத் தொடக்கத்தில் விழாத்தொடங்கியது, ஆசிரியருக்குச் சாஸ்திரங்களில் அவநம்பிக்கையைக் குறிக்கிறது.

**ஆவினிப்பட்டி:**— விவேகானந்தர் கல்விக் கழகத்தின் ஏழாம் ஆண்டு இரண்டாம் மாதக்கூட்டம் சென்ற 30—7—33 மாலை வீரகேசரி அதிபர் திரு. பெ. பெரி. சுப்பிரமணியன் செட்டியா ரவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேசுவரையர் கழகத்தின் சார்பாக சென்குப்தாவின் பிரிவுக்குப் பரிவு காட்டல், 'குமரன் பதினோராம் பருவமெய்திச் சிறப்புடன் தன் பணியாற்றி நிலவ வாழ்த்து'கூறல் என்னும் இரு தீர்மானங்கள் கொண்டுவர, தலைவராலும் கழகத்தினராலும் ஒப்புக்கொள்ளப்பெற்றன. கல்வியி னுயர்வு, சற்புத்திரரே ஆபரணம், கரிகாற்சோழன், அன்புவாழ்க்கை, தேசமுன்னேற்றம், ஜான்சன் அன்பிற்கு அன்பே உவமை, நளாயனி, காற்றும் சூரியனும், வாதாட லாகாது, பாண்டித்துரைத்தேவர், தருமஞ் செய்யவேண்டும் என்பனபற்றி இனிது தொகைவகை விரியிற் பிரசங்கமாக மாணவர்களால் பேசப்பெற்றன.

**பரிமணங்குடி:**— சண்முகநாதசுவாமி கோவிலில் ஆடி உஉ கார்த்திகை விசேடாதிகளும் ஸ்ரீ பரமகுரு சுவாமி மடாலயத்தின் சன்மார்க்க சங்கமும், ககஉ பூரத் திருநாளில் அபிடேக ஆராதனை குருபூஜாதிகளும் பிறவும் ஷை கோவில் சபை உரிமையாளர் திரு. மு. முத்துப்பிள்ளை யவர்களால் சிறப்பாக நடைபெற்றன.

**திரிசிரபுரம்:**—சைவசித்தாந்த சபையின் 48-ம் ஆண்டு நிறைவுத்திருவிழா ஆடி யச, யரு-ம் நாட்களில் தமிழ்ப்பேராசிரியர் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில், மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில், பல புலவர்பெருமக்களின் அரிய விரிவுரைகளுடன் நிறைவேறியதெனத் தெரிகிறது.

**திருவியலூர்:**—திருஞான சம்பந்தர் தேவாரம்பெற்ற இத் திருத்தல சிவாலயத்தைப் புதுக்கித் திருப்பணிசெய்து, மகாகும்பாபிடேகம் நடத்திய தேவகோட்டை திருவாளர் அ. ராம. அ. லெ. அ. அருணாசலம் செட்டியாரவர்களால் ஆடி கூஉ மண்டலாபிஷேகமும் சிறப்பாகச் செய்யப்பெற்றது.

**திருநாவலூர்:**—சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநாள் ஆடி ய௰ சுவாதியன்று [illegible]பெற்றது.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**— [illegible] ஒரு [illegible] மழை பெய்தது. குமார விநாயகர் திருக்கோயிலில் இம்மதி கூஉ விநாயக மகாசதுர்த்தி நாளில் விசேட அபிடேக ஆராதனைகளும், ககூஉ சதுர்த்தசி நடராஜாபிடேகமும் நடைபெறும். நகரச் சிவாலயத்தில் ஆவணி கூஉ விநாயக மகாசதுர்த்தி யபிடேக ஆராதனங்களும், திருவுலாவும், உபயக்காரராகிய திருவாளர் பெ. அ. குடும்பத்தினரால் செய்யப்பெறும். திருவாசக பாடகசாலையில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு கடுஉ குருபூசை நடைபெற்றது. இம்மதி கஎ, சதுவை [illegible] மணிவாசகசங்கம் கூடப்பெறும். உடுஉ பரணி நாள் திருவாசக பாடகசாலையின் ஆதி குருமூர்த்தியாகிய கோவிந்த சுவாமிகளின் உக-வது குருபூசை நடைபெறும்.

**ஆத்தங்குடி:**— மின்சார விளக்குத் திறப்புவிழா, இம்மதி கஉ மாலை நடைபெற்றது. பள்ளத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள் திறந்துவைத்தார்கள். கனம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அவ்விருவரையும் பாராட்டி தனவணிக நகரத்தார்களால் அவர்கட்கு வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்து வழங்கப்பெற்றன. கண்டிராக்டரால் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தப்பெற்றது.

**கோட்டையூர்:**—ராவ்பகதூர் கவி. அள. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு 1—8—1933ல், சென்னை அட்வகேட் மகா-ள-ஸ்ரீ S. வேங்கடேசையங்காரால் நியூ கோமள விலாசில் ஒரு பாராட்டு விருந்து செய்யப்பெற்றது. 1—10—1933 ல் திருவண்ணாமலையில் மகாசனங்களின்சார்பாக ஒருபாராட்டுப் பத்திரம் வாசித்து வழங்கப்பெற்றது. அதில் அவர்கள் குடும்பத்தினர் திருவண்ணாமலையிற் செய்துள்ள சிவதருமங்கள் சிறப்பாக விளக்கப்பெற்றுள்ளன. பிரபல கனதனவான்கள் விஜயமாயிருந்தனர்.

ஷையாரின் இளையசகோதரர் அளகப்பசெட்டியார் எம். ஏ. பாரட்லா அவர்கட்கு, 2—8—1933 காலை 11—45 க்கு கவர்மெண்ட் ஹௌஸ் பாங்க் வெயிட்டிங் ஹாலில் சென்னை கவர்னர் அவர்கள் சமுக மளித்து அரை மணி நேரம் செட்டியார்களின் தொழில்முறைகளையும் பிறவற்றையும் பேசி, செட்டியாரவர்களின் மதி நுட்பத்தையும் பெருந்தகைமையையும் பாராட்டினர்.

**தனவணிக நகரத்தார்களின் ஆதரவு:**—சென்னையில் கான மந்திரத்தில் 4—8—1933ல் சென்னை மேயர் குமாரராஜா கனம் எம். ஏ. முத்தையசெட்டியார் தலைமை வகித்து, சங்கீத ஆசிரியர்களுக்கும், புரந்ததாஸ் சங்கீதப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசுகளும் பட்டங்களும் வழங்கியகாலை, ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி, புராதனக்கோயில்களின் ஜீரணோத்தாரணத்திற்கும் சங்கீத கலைஞானங்கள் நிலைபெறுதற்கும், செட்டிநாட்டு ராஜா அவர்களின் ஆதரவையும், பொதுவாகவே தனவணிக நகரத்தார்களின் ஆதரவையும் புகழ்ந்து பேசினர்.

உ

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயவுண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை, சாத்திரநிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ங. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. ௬. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சுவேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற்குகந்தவண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.